
# கொங்கு மாமணி



## திரு. B.K. கிருஷ்ணராஜ் வாணவராயர்

சங்க காலம் தொடங்கி இன்றுவரை தொடர்ச்சியான வரலாறு கொண்ட குறுநில மன்னர் வம்சமான வாணவராயர் மரபில் பிறந்து, இன்று நாடுபோற்றும் வகையில் வாழ்ந்து கொண்டிருப்பவர், மேன்மை தங்கிய திரு. பி.கே. கிருஷ்ணராஜ் வாணவராயர் அவர்கள்.

1944 ஆம் ஆண்டு சமத்தூர் கிராமத்தில் பிறந்த அன்னார் அவர்கள், சட்டத்துறையில் பாரிஸ்டர் பட்டம் பெற்ற பின்னர், தொழில்துறையில் தன் கண்ணோட்டத்தைப் பதித்தார். இளமைக்காலம் தொட்டு கல்வியின்மேல் அவருக்கு இருந்த பிடிப்புடன், ஆன்மீக எண்ணமும் மேலோங்கி நின்றது. தொழில் துறையில் தனது கவனத்தை முழுவதும் செலுத்தினாலும், சுவாமி விவேகானந்தரின் ஆன்மீகம், மகாத்மா காந்தியின் உயரிய வாழ்க்கையின் தாக்கம் ஆகியவவை அன்னார் அவர்களின் வாழ்க்கையை, அவற்றை நோக்கி திசை திருப்பியது.

தனது கல்லூரி வாழ்க்கையில், மாணவர் தலைவராகப் பொறுப்பேற்று மாணவர்களை வழிநடத்திய அவர், கல்லூரி நாட்களில் பல அரசியல் மற்றும் ஆன்மீகத் தலைவர்களைச் சந்திக்கும் வாய்ப்புப் பெற்றார். இன்று இந்திய நாட்டின் கலாச்சாரத்தை உலகளவில் பரப்பி, நாட்டிற்கு தனது பங்கைச் செலுத்துகிறவர். அதேபோல் பல மதங்களுக்குள் ஒற்றுமையும், அமைதியும் ஏற்படுத்தி மத நல்லிணக்கத்தை வலியுறுத்திப் போராடி வருகிற ஒரு அரிய மனிதர் அன்னார் அவர்கள்.

பாரதீய வித்யாபவன் தலைவராகப் பொறுப்பேற்று இந்தியத் திருநாட்டின் பழமை வாய்ந்த கலாச்சாரம், மற்றும் அறிவுத்திறனை உலகறியும் வண்ணம் இன்றளவும் பரப்பி ஓய்வில்லாமல் உழைத்து வருகின்ற மனிதநேய உழைப்பாளி. மக்களுக்காக வாழ்ந்த மகாத்மாவின் முழு உருவ வெண்கலச் சிலையைத் தனது

சொந்த ஊரில் நிறுவி, மகாத்மாவை போல தானும் ஓர் உன்னதமான பொதுநலவாதி என்பதைச் சொல்லாமல் உணர்த்தும் உத்தமர்.

உலக சமாதானம், சமத்துவம், அமைதி, வன்முறையில்லா வாழ்க்கை, ஆன்மீகம், தொழில் முன்னேற்றம் என தனது வாழ்வின் குறிக்கோளை சொல்லளவில் இல்லாமல் நடைமுறைப்படுத்தி, நமது நாட்டின் பெருமையை உலகறியச் செய்ய முயற்சிக்கும் முனைப்பாளி. அன்னாரின் உழைப்பையும், மனித நேயத்தையும், பொதுச் சேவையையும் அறிந்து 'மிகச் சிறந்த மனிதர்' என்ற பட்டத்தை ரோட்டரி சங்கம் வழங்கி தனக்கு கௌரவத்தைத் தேடிக்கொண்டது.

இந்திய நாட்டின் எதிர்கால சிற்பிகளான மாணவர்களின் ஒளியேற்றத்திற்கு, பல கல்வி நிலையங்களில் முக்கியப் பங்காற்றி கல்வித்துறையில் தனது பங்கைச் செலுத்துபவர். அன்னாரின் சிறந்த சுயநலமில்லாக் கல்விப் பணியைப் பாராட்டி, பாரதியார் பல்கலைக் கழக சின்டிகேட் மற்றும் செனட் உறுப்பினராக அன்னாரை தமிழக அரசு நியமித்து கௌரவித்தது.

கல்விப் பணியில் அன்னார் அவர்கள் பல்வேறு பொறுப்புகளை மேற்கொண்டு கல்வித்துறை மேம்படப் பாடுபட்ட செம்மல் ஆவார். கோவை கேந்திர பாரதிய வித்யாபவன் தலைவர், கொடைக்கானலில் உள்ள பவன்ஸ் காந்தி வித்யாசரமம், பள்ளியின் துணைத்தலைவர், பாரதிய வித்யா பவன் தலைமை நிலைய செயற்குழு உறுப்பினர், திருச்சி, பாரதிதாசன் இன்ஸ்டியூட் ஆப் மேனேஜ்மெண்ட் உறுப்பினர் மற்றும் பல்வேறு கல்லூரி, பள்ளிகளின் நிர்வாகக் குழு உறுப்பினராக அன்னாரின் கல்விப் பணி தொடர்கிறது.

நூற்பாலை தொழிலில் தனது திறமையால் சக்தி நூற்பாலையை ஒரு தலைசிறந்த நிறுவனமாக மாற்றி அனைவரது பாராட்டையும் பெற்றவர். நூற்பாலை தொழிலில் அன்னாரின் திறமையை உணர்ந்து அவரை தமிழக அளவில், மொத்தம் 90 இலட்சம் ஸ்பின்டில்ஸ் திறனுடன் 4 தென்னிந்திய மாநிலங்களில் உள்ள 344 நூற்பாலைகளை உறுப்பினர்களாகக் கொண்ட 'சதர்ன் இந்தியா மில்ஸ்' சங்கத்தின் தலைவராகவும், "தென்னிந்திய நூல் ஆராய்ச்சி நிறுவனத்தின்" நிர்வாக உறுப்பினராகவும், நியூ டெல்லியைத் தலைநகராகக் கொண்ட "இந்திய காட்டன்

மில்ஸ்" சங்கத்தின் தலைவராகவும் செல்வனே பணியாற்றிய மிகச் சிறந்த தொழிலதிபர் ஆவார்.

அன்னாரின் அயராத முயற்சியின் பலனாக, 'தி காட்டன் டெக்னாலஜி மிசன்' என்ற திட்டத்தை சுமார் ரூ. 700 கோடி நிதியுடன், பருத்தி மற்றும் நூற்பாலைத் தொழில் நலிவடையாமல் இருக்க இந்திய அரசு ஏற்படுத்தக் காரணமானவர். அதனால் பல்லாயிரம் தொழிலாளர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றியவர்.

தன்னம்பிக்கை, அறிவாற்றல், திறமை, உண்மை, உழைப்பு, எளிமை, பொதுநலம், மனிதநேயம், மதநல்லிணக்கம், ஆன்மீகம், ஞானம், அனைத்திற்கும் ஒரே வார்த்தை எதுவென்று அகராதியில் தேடினால் கிடைக்கும் சொல் திரு. கிருஷ்ணராஜ் வாணவராயர் என்றுதான் இருக்கும் என்று கூறுமளவுக்கு சிறப்பு பெற்றவர்.

எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக, அன்னாரின் மதநல்லிணக்கத்தைக் கேள்வியுற்ற திரு. போப்பாண்டவர் அவர்கள், அன்னாரை இத்தாலி வாடிகன் நகரில் நடைபெற்ற மத நல்லிணக்க மாநாட்டில் கலந்துகொள்ள அழைத்தது மட்டுமின்றி, அன்னாரை அருகில் அமர்த்தி அவருடன் உணவருந்தி மகிழ்ந்தார். மாநாட்டில் "உலக அமைதிக்காக மதங்களின் பங்கு" என்ற தலைப்பில் அன்னார் ஆற்றிய உரை, மிகச் சிறந்த வரவேற்பையும், புகழையும் பெற்றுத்தந்தது. இந்திய நாட்டின் மத நல்லிணக்க நிலைப்பாட்டை உலகளவில் ஒளிரச் செய்தவர் என்ற பெருமையை அன்னார் அவர்களுக்கு இந்த மாநாடு பெற்றுத் தந்தது. அன்னார் ஆற்றிய உரை பின்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது.

மகாத்மா காந்தியின் அமைதியையும், கோட்பாட்டையும் பின்பற்றி சமூகப் பணியில் முழுமுச்சுடன் இணைத்துக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிற அன்னாரின் சிறப்பை உலகறியச் செய்யும் வகையில் "முனைவர் பட்டம்" வழங்கி ஸ்ரீ அவினாசிலிங்கம் பல்கலைக் கழகம் பெருமைப்படுத்தியது.


அனைவரையும் தனது வசீகர புன்னகையாலும், உண்மையுடன் பேசும் சொல்லாற்றலாலும், பொருளாதார வித்தியாசம் இன்றி பழகும் இனிய குணத்தாலும், பலரின் நன்மதிப்பைப் பெற்றவர்.

அன்னார் அவர்கள் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் முதல் தலைவரும், சக்தி குழுமத்தின் தலைவருமான அருட்செல்வர் Dr. N. மகாலிங்கம்

அவர்களின் மருமகன் ஆவார்.

பல்வேறு துறைகளில் அன்னார் ஆற்றிய அரும்பணிகளால் நமது இந்தியத் திருநாடும், தமிழகமும், குறிப்பாக கொங்குச் சமுதாயமும் பெருமை அடைந்துள்ளன. அனைத்துச் சிறப்புகளையும் பெற்ற மதிப்பிற்குரிய திரு. கிருஷ்ணராஜ் வாணவராயர் அவர்களுக்கு கொங்குச் சமுதாயத்தின் உயரிய விருதான "கொங்கு மாமணி" விருது வழங்கி கௌரவிப்பதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமையடைகிறது.

## கொங்கு மாமணி



## முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பனார்

நாமக்கல், சிவியாம் பாளையம் கிராமத்தில் சுப்பராயக் கவுண்டர்– பழனியம்மாள் தம்பதியர்க்கு 1928–ல் மகனாகப் பிறந்தார். பட்டப் படிப்பை முடித்து, தான் படித்த நாமக்கல் உயர் நிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணி புரிந்தார். மாவட்டக் கல்வி அலுவலராக 3–ஆண்டுகள், 2–ம் உலகத் தமிழ் மாநாட்டு உதவித் தனி அலுவலராக ஓர் ஆண்டும், தமிழ் வளர்ச்சித்துறை உதவி இயக்குநராக 10– ஆண்டுகளும், இயக்குனராக 6– ஆண்டுகளும், தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக் கழகப் பதிவாளராக, பதிப்புத்துறை இயக்குநராக 1½ ஆண்டும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநராக 1½ ஆண்டும் பொறுப்புக்களை வகித்தார்.

சிலப்பொலியார் நாடறிந்த நாவலர், முதல்தர இலக்கியப் பொழிஞர், தமிழ் இலக்கிய மேடைப் பேச்சுக் கலையில் வல்லவர். கேட்போர் பயனடையும் வண்ணம் வியத்தகு வகையில் எந்தக் குறிப்பும் கையில் வைக்காமல் தமிழை அருவிபோலக் கொட்டும் ஆற்றல் மிக்கவர். இவருடைய நினைவாற்றல், ஆழமான தமிழறிவு, சொற்பொழிவாற்றும் பாணி ஆகியன எண்ணி எண்ணி வியக்கத்தக்கன. இடையறா இலக்கியச் சொற்பொழிவுகள் மூலம் தமிழ் இலக்கியத்தைப் பட்டி தொட்டியெங்கும் பரப்பியவர். மக்கள் மனதில் தமிழ் உணர்வை விதைத்தவர்.

சிலம்பொலி, இலக்கியச் சிந்தனைகள், பெருங்கதை ஆராய்ச்சி, நெஞ்சை அள்ளும் சீறா, பாவேந்தர் ஓர் உலகக் கவிஞர், காப்பியக் கம்பரும் புரட்சிக்கவிஞரும், வளரும் தமிழ், சங்கத் தமிழ்த் தேன் போன்ற அரிய ஆய்வு நூல்களையும், மலர் நீட்டம், நல்ல குறுந்தொகையில் நானிலம், நான் ஒரு தும்பி, போன்ற திறனாய்வு நூல்களையும், நாலடி நல்லுரை, மூன்றும்நான்கும், சிலப்பதிகாரத் தெளிவுரை, மணிமேகலை தெளிவுரை, போன்ற உரை நூல்களையும் படைத்துள்ளார். இவை தமிழ் ஆர்வலர்களின் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

இளங்கோவும் வள்ளுவரும், புதுக்கவிதைக் கொள்கைகள், நாமக்கல் கவிஞர், பாரதிதாசன் ஆகியோரின் இலக்கியக் கொள்கை, புலவர் குழந்தையின் படைப்புகள், சிலம்பில் புதிய சிந்தனைகள் போன்ற எண்ணற்ற ஆய்வுக்கட்டுரைகளைப் பல்வேறு பல்கலைக் கழகங்களில் படைத்துள்ளார். பல்கலைக் கழகங்களில் 9—க்கும் மேற்பட்ட அறக்கட்டளைச் சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார்.

தொடர் சொற்பொழிவுகளில் சிலம்பொலியாருக்கு இணை எவருமில்லை. மணிமேகலை, பெருங்கதை, பிரபந்த இலக்கியங்கள், சிலப்பதிகாரம், சங்க இலக்கியம், பாரதிதாசன் கவிதைகள், இராவண காவியம், சீறாப் புராணம், இராஜநாயகம், சீவக சிந்தாமணி, தேம்பாவணி ஆகிய தொடர் சொற்பொழிவுகள் மூலம், தமிழ் அன்னைக்கு புகழ் பெரும் சேர்த்துள்ளார். “மீரா பவுண்டேசனில்” இவர் ஆற்றிய இஸ்லாமிய இலக்கியமான சீறாப்புராணத் தொடர் சொற்பொழிவுகள் வளைகுடா நாடுகளில் இன்றும் எதிரொலித்துக் கொண்டுள்ளன.

1954 ஆம் ஆண்டு சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களால் “சிலம்பொலி” என்று அழைக்கப்பட்டார். தவத்திரு குறைக்குடி அடிகளாரால் “நூலறி புலவர்” என்றும், மீரா நிறுவனத்தினால் “சீறாச் செல்வர்” என்றும், மலேசியத் தமிழ்ச் சங்கத்தாரால் “தமிழ் நலக் காவலர்” என்றும் சிறப்புப் பட்டங்கள் பெற்றவர்.

சீதக்காதி அறக்கட்டளை விருது, சென்னை ஆழ்வார்கள் மையம், கலைஞர் விருது, தமிழக அரசின் கலைமாமணி விருது, பாவேந்தர் விருது, ராசா சர் முத்தையா செட்டியார் நினைவு விருது, சேலம் தமிழ்ச் சங்கத்தின் “தமிழ் வாகைச் செம்மல்” விருது, சென்னை கம்பன் கழகத்தின் சீறா விருது, கமலஹாசன் அன்னை ராசலட்சுமி விருது, கம்பன் கழகத் தமிழ்ச் சான்றோர் விருது போன்ற விருதுகள் சிலம் பொலியாரின் தமிழ்ச் சேவைக்குச் சான்று பகர்வன!

இவரின் தமிழ்ப்பணியறிய விரும்பி அழைத்த நாடுகள் மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, மொரீசியஸ், அமெரிக்கா, இங்கிலாந்து, ஐக்கிய அரபு நாடுகள், ஆஸ்திரேலியா ஆகியனவாகும்.

மலர் நீட்டம் என்னும் நூல் பெங்களூர் பல்கலைக் கழகத்திலும், நான் ஒரு தும்பி எனும் நூல் பாரதிதாசன் பல்கலைக் கழகத்திலும் பட்டப் படிப்பிற்குப் பாட நூல்களாக வைக்கப் பெற்றவை. தூய தமிழில் எழுதப்பட்ட “கணிதச் செல்வம்” எனும் நூல்கள் உயர்நிலைப் பள்ளிப் பாடத் திட்டத்தில் 4—ம் வகுப்பில் இருந்து 11—ம்

வகுப்பு வரை கணிதப்பாட நூல்களாக வைக்கப்பெற்றிருந்தன. கணித நூல்களில் வரும் பெயர்கள் தூய தமிழ்ப் பெயர்களாக இருந்தன.

வள்ளுவருக்கு ஒரு வாசுகிபோல் அமைந்தவர் இவருடைய மறைந்த மனைவி செல்லம்மாள். செல்லம்மாள் – செல்லப்பன் தம்பதியினருக்கு மணிமேகலை, தொல்காப்பியன், கௌதமி, கொங்குவேள், நகைமுத்து ஆகிய தூய தமிழ்ப் பெயர்களைக் கொண்டோர் மக்கட் செல்வங்களாவர்.

இதுவரை சுமார் 800–க்கும் மேற்பட்ட நூல்கட்கு ஆய்வு முன்னுரைகள், மதிப்புரைகள், அணிந்துரைகள் அளித்துள்ளார். இந்த வகையில் சிலம்பொலியாருக்கு யாரும் ஈடில்லை எனலாம்!


தமிழக அரசு நடத்திய சென்னை உலகத்தமிழ் மாநாடு, மதுரை உலகத் தமிழ் மாநாடு ஆகியவற்றில் மாநாட்டு மலர் வெளியிடும் பொறுப்பு ஏற்று பலரின் பாராட்டைப் பெற்றார். பேரறிஞர் அண்ணா, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர், கலைஞர் கருணாநிதி ஆகிய மூன்று முதல்வர்களின் பாராட்டைப் பெற்ற தமிழறிஞர் சிலம்பொலியார் அவர்கள்!

தமிழ்ச் சான்றோர் பேரவையின் ஒருங்கிணைப்பாளராக 3–ஆண்டுகள் பட்டி தொட்டியெங்கும் பயணம் செய்து, தமிழ் மக்களுக்குத் தாய்மொழிப் பற்றையும், இனப்பற்றையும் ஊட்டி வளர்த்தவர். நாமக்கல் கொங்கு கல்வி நிறுவனங்களின் தலைவராக 4–ஆண்டுகளாகப் பொறுப்பேற்று நடத்தி வந்தார்.

கொங்கு வேளாளர் சமூகத்தின் மேம்பாட்டில் பேரார்வம் கொண்டவர். சமுதாய விழாக்கள், நிகழ்ச்சிகளுக்கு அழைத்தால் தவறாமல் கலந்து கொண்டு சமுதாயப் பணியாற்றுபவர்களை நெஞ்சார வாழ்த்துவார்.

உலகெலாம் சென்று தமிழ்ச் சேவை செய்யும், தமிழ்த்தாயின் தவப்புதல்வன், கொங்குத் தமிழ் மகன் சிலம்பொலி செல்லப்பனார் அவர்கள் கண்ணந்தை கூட்டத்தைச் சேர்ந்தவர். எளிமையான வாழ்க்கையை மேற்கொண்டுள்ள சிறந்த பண்பாளர். தமிழர் பண்பாடு, கலை, கலாசாரம் ஆகியனவற்றைக் காப்பாற்றியே தீர வேண்டும் என்று முதுமையிலும் அயராது பாடுபடும் சிலம்பொலியார் அவர்களைப் பாராட்டி 'கொங்கு மாமணி' விருது வழங்குவதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமையடைகிறது.

## கொங்கு மாமணி



## டாக்டர். சி. பழனிவேலு

முயன்றால் முடியாதது இல்லை என்பதற்ககு உதாரணம் டாக்டர் சி. பழனிவேலு

உலகத் தொடர்பில்லாத குக்கிராமத்தில் பிறந்து, பிழைப்புதேடி தனது 3–வது வயதில் பெற்றோருடன் மலேசியா சென்று, 6–ம் வகுப்புவரை தமிழ் வழிக் கல்வி கற்று, ஓட்டுநராகப் பணிபுரிந்த தந்தை, தோட்டக் கூலியாகப் பணியாற்றிய தாய் ஆகியோரின் வருமானம் போதாமல், பகுதி நேரக் கணக்குப் பிள்ளை வேலை பார்த்து, மாதம் 30 ரூபாய் சம்பளத்திலிருந்து தனது திறமையால் 90–ரூபாய் அளவிற்கு உயர்ந்து, அந்தப் பணத்தில் சிக்கனம் செய்து, உயர் கல்வி பெற வேண்டும் என்ற வெறியோடு நாடு திரும்பி, தனது 21–ம் வயதில் பள்ளிச் கல்வியை முடித்து, 1972–ல் தகுதியினடிப்படையில் சென்னை மருத்துவக் கல்லூரியில் இடம் பெற்று இன்று உலகப் புகழ் பெற்ற மருத்துவராக இருப்பவர் டாக்டர் சி. பழனிவேலு அவர்கள்!

1950–ல் நாமக்கல் அருகில் மேல்சாத்தம்பூர் கிராமத்தில் திரு. சின்னசாமி – திருமதி காளியம்மாள் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். கூறை கூட்டத்தைச் சேர்ந்த பழனிவேலு 1977–ல் ஜெயா அவர்களைத் திருமணம் செய்து கொண்டார். துணைவியாராக மட்டும் ஜெயா வரவில்லை, தனது உயர் கல்வி பெறும் கனவை நனவாக்கும் சஞ்சீவியாகவும் வந்தார் என்று பழனிவேலு அவர்கள் கூறுகிறார். டாக்டர் பழனிவேலு – ஜெயா தம்பதியினருக்கு ஒரு மகனும், ஒரு மகளும் உள்ளனர்.

மலேசியாவிலிருந்து இந்தியா திரும்பியதும் பள்ளிப்படிப்பை முடித்ததில் இருந்து, இன்று வரை டாக்டர் அவர்கள் செய்த சாதனைகளை விவரிக்க ஒரு பெரிய

புத்தகமே எழுத வேண்டும். இடம் கருதி, காலம் கருதி சுருக்கமாகக் குறிப்பிடப்படுகின்றன.

1981–ல் மதுரை மருத்துவக் கல்லூரியில் எம். எஸ் பட்டம் பெற்றார். 1983–ல் டெல்லி சென்று உயர்கல்வி பெற்று, 1988–ல் FICS தகுதி பெற்றார். அதே ஆண்டில் சென்னை மருத்துவக் கல்லூரியில் m.c.c. பட்டம் பெற்றார். 1990–ல் கோயமுத்தூரில் தனது மருத்துவப் பணியைத் தொடங்கினார். 1991–ல் "Coimbatore Institute of Gastrointestinal Endosurgery" என்ற நிறுவனத்தைத் தொடங்கினார். 1992–ல் உயர்பயிற்சிக்காக மீண்டும் அமெரிக்கா சென்றார். 1997–இல் FACS - தகுதிபெற்றார் 2001– இல் "GEM" என்றழைக்கப்படுகின்ற "Gastro Entrology Medical Centre & Hospital India Ltd." என்ற மருத்துவமனையைத் தொடங்கினார். 100–படுக்கைகள் கொண்ட உலகத்தரம் வாய்ந்த மருத்துவமனை அதுவாகும்.

உலகின் அதிநவீனத் தொழில் நுட்பத்துடன் கூடிய அறுவை சிகிச்சை அரங்கத்தைக் கொண்ட மருத்துவமனையாகும் இது. அங்கு செய்யப்படும் அறுவை சிகிச்சைகளை உலகம் முழுவது உள்ள மருத்துவர்கள் நேரடியாகப் பார்க்கும் அளவுக்கு அதிநுட்பத்திறன் கொண்ட காமிராக்கள் அங்கு பொருத்தப்பட்டுள்ளன. தொடர்ந்து 15 மணிநேரம் இலவச லேப்பராஸ்கோபிக் அறுவை சிகிச்சை செய்து உலக சாதனை படைத்துள்ளார். அது விரைவில் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பெற உள்ளது. GEM ENDOSURGERY & NATIONAL TRAINING INSTITUTE என்ற அமைப்பை நிறுவி உலகம் முழுவதிலும் உள்ள மருத்துவர்கள் பயிற்சிபெற வசதி செய்துள்ளார். உலகெங்கும் இதுவரை சுமார் 500 மருத்துவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். இங்கு பயிற்சி பெறப் பதிவு செய்து வருடக் கணக்கில் காத்துக்கிடக்கின்றனர். லண்டனில் உள்ள உலக புகழ்பெற்ற "ராயல் காலேஜ் ஆப்சர்ஜன்ஸ்–எடின்பர்க்" கல்லூரியில் "Surgical Knowledge & Skills website - இல் டாக்டர் பழனிவேலு அவர்களின் 17–அறுவை சிகிச்சை வீடியோக்கள் வைக்கப்பட்டுள்ளன. இவைகளைத் தேவைப்படுவோர் இலவசமாகக் காணலாம். இது டாக்டர் பழனிவேலு அவர்கட்கு மட்டும் கிடைத்த பெருமையல்ல! கொங்கு நாட்டுக்கும், தமிழ்நாட்டிற்கும், ஏன், இந்தியாவிற்கே கிடைத்த பெருமையாகும்.

லேபரோஸ்கோபிக் அறுவை சிகிச்சையை தென்னிந்தியாவில் முதன் முதலாக அறிமுகப்படுத்திய பெருமை கொண்டவர்.

இத்துறையில் அவர் கையாண்ட 8–உத்திகள், தொடர்ந்து, 5–ஆண்டுகளாக (SAGES). "அமெரிக்கன் லைப்ரரி அவார்டு" பெறக் காரணமாக அமைந்துள்ளது !

1998–ல் ரோமில் நடந்த அவர் சார்ந்த துறையின் உலக மருத்துவ மாநாட்டில் அவர் சமர்பித்த கட்டுரை சிறந்ததாகத் தேர்வு செய்யப்பட்டது.

2–மற்றும் 3–ஆண்டு, அறுவை சிகிச்சைப் பயிற்சிகள் அளிக்க மத்திய அரசு அவருக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. தனது துறை சார்ந்த அறுவை சிகிச்சை பற்றி அவர் எழுதிய நூல் உலகளவில் அங்கீகாரம் பெற்றுள்ளது.

அவருடைய மருத்துவமனை, உயர்பயிற்சி மையங்களும், அந்தத் துறையில் இந்தியாவிலேயே முதன்மையானவை எனப் பலவகையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. உலகில் தனது துறை சார்ந்த அறுவை சிகிச்சையில் இதுவரை யாருமே செய்யாத பல சிக்கலான அறுவை சிகிச்சைகளைச் செய்து உலகப் புகழ் பெற்றுள்ளார். 1997–முதல் 2003–வரை, 6–அறுவை சிகிச்சைகளை உலகம் முழுவதும் காணும்படி செய்து சாதனை படைத்துள்ளார்.

மருத்துவச் செலவு செய்ய வசதியில்லா ஏழைகட்கு இலவசமாகவே அறுவை சிகிச்சை செய்துள்ளார். வசதியில்லாத நோயாளிகளைப் பார்க்கும் போது சிறு வயதில் அடிபட்ட தன் விரலைப் பார்த்துக்கொள்வார். விரலில் பட்ட காயத்திற்கு மருத்துவம் செய்யக் கூட அப்போது அவர் குடும்பத்தில் வசதியில்லை. ஊனமுற்ற அந்த விரலை அவ்வப்போது பார்த்துக் கொள்வாராம்! பணம் இல்லாததால் எந்த நோயாளியும் மருத்துவம் செய்து கொள்ள இயலாத நிலையைப் போக்குவதே தன் லட்சியம் எனக் கூறுகிறார் அவர். அவருடைய "ஜெம்" மருத்துவமனையை சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்கள் திறந்துவைத்தார்கள். Dr. பழனிவேலு சொல்கிறார் "MONEY COMES AND GOES," ."MORALITY COME AND GROWS" I Belive in this Philosphy

“நானாக எதுவும் செய்வதில்லை. கண்ணுக்குத் தெரியாத ஒரு சக்தி என்னை இயக்குகிறது. நான் ஒரு கருவி மட்டுமே” எனக் கூறும் Dr. பழனிவேலு இளமையில் கடுமையான சோதனைகளைச் சந்தித்தவர். இன்று உலக சாதனைகளைப் படைத்துக் கொண்டிருக்கிறார். டாக்டர் பழனிவேலு அவர்களால் கொங்கு நாட்டிற்கும், தமிழ்நாட்டிற்கும், ஏன், இந்தியாவிற்கும் பெருமை கிடைத்துள்ளது. அவரைப் பாராட்டி ‘கொங்குமாமணி’ விருது அளிப்பதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமை பெறுகிறது.

## சாதனையாளர்



## முனைவர் மே.அ. வேலுசாமி

தெய்வத்திரு எம்.பி. அப்பாவுக்கவுண்டர் – திருமதி செல்லம்மாள் தம்பதியினருக்கு **1935–**ல் நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வட்டம் உஞ்சனை மேட்டுப்பாளையத்தில் மூத்த மகனாகப் பிறந்தார். பள்ளிக் கல்வியைச் சொந்த ஊரில் முடித்து சென்னை லயோலா கல்லூரியில் இடைநிலைக்கல்வி பெற்று, கோவை பூ.ச.கோ. பொறியியல் கல்லூரியில் பி.ஈ. பட்டம் பெற்றார். **1956–**ல் அரசு பொதுப்பணித் துறையில் இளநிலைப் பொறியளராக **3–**ஆண்டுகள் பணியாற்றினார். ராமநாதபுரம் மாவட்டத்தின் கிராமங்களில் மக்களோடு இரண்டறக் கலந்து சுமார் **450–**பணிகளைச் சிறப்பாக முடித்து அரசின் பாராட்டைப் பெற்றார். உயர் கல்வி பெற, சென்னை கிண்டி பொறியியல் கல்லூரியில் சேர்ந்து இயந்திரவியல் முதுகலைப் பட்டம் பெற்றார். அடுத்து வாரங்கல் "ரீஜனல் பொறியியல் கல்லூரி"யில் விரிவுரையாளராகப் பணியாற்றிய பிறகு சென்னையில் உள்ள "இந்தியத் தொழில் நுட்பக் கழகத்தில் (I.I.T) 1961-ல் "Applied Mechanics" என்ற துறையின் முதல் பணியாளராகவும், விரிவுரையாளராகவும், சேர்ந்தார். பிறகு **1970–**ல் அமெரிக்க "மசாச்சு செட்ஸ்" பல்கலைக்கழகத்தில் சேர்ந்து முனைவர் பட்டம் பெற்றார். சிலகாலம் அதே கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றினார். "American Society & Mechanical Engineers" (ASME) என்ற அமைப்பு இவருக்கு **1974–**ல் சிறந்த ஆராய்ச்சியாளர் விருதை அளித்து பெருமைப்படுத்தியது.

**1977** முதல் **1979** வரை "ERDA" என்ற அமெரிக்க அரசு நிறுவனம் ஆய்வு நிமித்தமும், **1986–**ல் "ASME" வடிவமைப்புக் குழுவில் சிறப்புரையாற்றவும் அமெரிக்கா சென்று வந்தார்.

பலமுறை ஐ.ஐ.டி. இவருக்கு சிறந்த ஆசிரியருக்கான பாராட்டுக்களை வழங்கி பெருமைப்படுத்தியது. சிறந்த ஆய்வுகள் பலவற்றை மேற்கொள்ளுமாறு அமெரிக்க நிறுவனம் பலமுறை அவருக்கு அழைப்பு அளித்தது. இந்தியத் தொழில்நுட்பக் கல்லூரியில் 15–ஆண்டுகள் செனட் உறுப்பினராகவும், ஒரு ஆண்டு அண்ணா பல்கலை கழக சிண்டிகேட் உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தார். 100–க்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளைப் படைத்துள்ளார். சாண எரிவாயு உபயோகத்தை தொழில் நிறுவனங்கட்கும், கிராமங்களுக்கும் அறிமுகப்படுத்தினார். கற்பிப்பதில் பேரார்வத்துடன் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்ட இவர் பல ஆராய்ச்சிச் சாதனங்களை உருவாக்கி மாணவர்களின் ஆய்வுக்கு உதவியவர்.

முனைவர் பட்டம் பெற்ற 10–க்கும் மேற்பட்ட மாணவர்கட்கு மேற்பார்வையாளராகவும், பல தொழில் இயக்கங்கட்கு ஆலோசகராகவும் பணியாற்றியவர்.

ஐ.ஐ.டி–யில் ஓய்வு பெற்ற 1995–ல் சென்னையில் ஜெரூசலம் பொறியியல் கல்லூரி முதல்வராக இருந்து பல ஆங்கீகாரங்களைப் பெறக் காரணமாயிருந்தவர்.

2003–இறுதியில் பெருந்துறை கொங்கு பொறியியல் கல்லூரியின் "டீன்" பொறுப்பை ஏற்றார். ஆசிரியர்களின் கல்வித்தகுதியை மேம்படுத்துதல், ஆராய்ச்சியில் ஈடுபடுத்துதல், மாணவ மாணவியரை, Creativity And Innovation பயிற்சியில் ஈடுபடுத்துதல், Patent Laws விதிகளை அறிமுகப்படுத்துதல் போன்ற பணிகளைச் செவ்வனே செய்ய தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளார். பண்ணை கூட்டத்தைச் சேர்ந்த திரு. வேலுசாமி, 1963–ல் காந்திமதி என்ற மங்கையைத் திருமணம் புரிந்தார். முனைவர் வேலுசாமி – திருமதி காந்திமதி தம்பதியினருக்கு ஒரு மகன். அமெரிக்காவில் உள்ளார். நாட்டின் தலைசிறந்த பொறியியல் அறிஞர் முனைவர் வேலுசாமி அவர்கள் கொங்குச் சமுதாய மேம்பாட்டிலும் பேரார்வம் கொண்டிருந்தார். சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத் தலைவராக இருந்து சங்கத்திற்குப் பெருமை

சேர்த்தார்.

கொங்கு சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் பெருமை சேர்த்த அன்னார் அவர்களுக்கு ‘சாதனையாளர் விருது’ வழங்கி கௌரவிப்பதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமையடைகிறது.

## சாதனையாளர்



# தேவத்தூர் நா. நாச்சிமுத்து

(முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர், ஒட்டன் சத்திரம்.)

திண்டுக்கல், ஒட்டன் சத்திரம், தேவத்தூர் கிராமத்தில் 1927ம் ஆண்டு மாலை திரு. நாச்சிமுத்துக்கவுண்டர் – திருமதி பழனியம்மாள் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். மதுரை அமெரிக்கன் கல்லூரியில் இண்டர்மீடியட் படித்தவர். இளமையிலேயே தூய கதராடை உடுத்தி எளிமையான வாழ்க்கையை மேற்கொண்டார்.

1967 முதல் 1976 வரை இரண்டு முறை சட்டப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பெரியார், அண்ணா ஆகியவர்களிடம் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தார். ஓர் அரசியல் வாதி எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாகத் திகழ்ந்தவர்.

1968–ல் தனிமனிதராக, தன்னிடமிருந்த பொருளைக் கொண்டு, தன்னுடைய வட்டார நலனைக் கருதி கல்வித் கூடம் ஒன்றைத் தேவத்தூரில் தொடங்கினார். மணிமேகலை – இளங்கோ உயர்நிலைப்பள்ளி என்று பெயரிட்டு, இன்று அதை மற்ற கல்விக் கூடங்கட்கு ஓர் முன்னோடியாக நடத்தி வருகிறார். மாணவர்களின் உடல்நலம், மனநலம், ஒழுக்கம், பண்பாடு, தாய்மொழிப் பற்று, தாய்நாட்டுப்பற்று ஆகிய உயர்ந்த கோட்பாடுகளைப் போதிக்கும் மிகச் சிறந்த கல்வி நிறுவனமாகத் திகழ்கிறது.

மக்கள் விவசாயத்தை மட்டுமே நம்பியிராமல் விவசாயம் சார்ந்த பல்வேறு சிறு தொழில்களைத் தொடங்க மக்களிடையே விழிப்புணர்வு இயக்கத்தைத் தொடங்கி, அறிக்கைகள், துண்டுப் பிரசுரங்கள் மூலம் பரப்பியவர். தமிழ்ப் பண்பாடு, தமிழ்மொழி, தமிழ் இனப்பற்று ஆகியன அவருடைய உதிரத்தோடு ஊறியவை. சமூக விஞ்ஞானி, சிறந்த சிந்தனையாளர்.


எண்ணத்தாலும், செயலாலும் அவர் ஒரு உண்மையான காந்தீயவாதி ஆவார். கடந்த 40 ஆண்டுகட்கும் மேலாக, பழங்கள், தேங்காய், பச்சைக் காய்கறிகள், ஆகியவற்றை மட்டுமே உண்டு, தூய இயற்கை வாழ்வு வாழ்ந்து வருகிறார். இயற்கை உணவு, இயற்கை வாழ்வு இவற்றில் நிபுணராக விளங்கும் அன்னார் திருநெல்வேலி மாவட்டம், சிவசைலத்தில் உள்ள உலகப்புகழ் பெற்ற இயற்கை நல்வாழ்வு ஆசிரமத் தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார்.

மணமக்களுக்கும், பரிசு பெறும் மாணவர்கட்கும், பாரதிதாசன், பெரியார், அண்ணா, மு.வ. போன்வர்களின் நூல்களையும், திருக்குறன் நூலையும் பரிசாக வழங்கும் வழக்கத்தைக் கொண்டவர்.

1970–ல் மணிமேகலை இளங்கோ தமிழ்வழி மழலையர் தொடக்கப் பள்ளியையும் தொடங்கிச் சிறப்பாக நடத்தி வருகிறார். குழந்தைகட்குத் தூய தமிழ்ப் பெயர்களையே வைக்க வேண்டும் என்று, அதை ஓர் இயக்கமாகவே நடத்துபவர். இவை அனைத்திற்கும் மேலாக, கொங்கு வேளாளர் சமூகத்தை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று பாடுபடுபவர்.

1976–ல் கொங்க வேளாளர் சமூகத்தைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்ததில் திரு. நாச்சிமுத்து அவர்கட்கு முக்கியப் பங்குண்டு. கொங்கு சமூக மேம்பாட்டுக்காக உழைப்பவர்களைப் பாராட்டி உற்சாகப்படுத்துவார். பில்லன் கூட்டத்தைச் சேர்ந்த சாதனையாளர் திரு.நாச்சிமுத்து அவர்களால் தமிழ்நாட்டிற்கும், கொங்கு நாட்டிற்கும் பெருமை. கொங்கு சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் பெருமை சேர்ந்த அன்னார் அவர்களுக்கு “சாதனையாளர் விருது” வழங்கி கௌரவிப்பதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமையடைகிறது.

## சாதனையாளர்



## வ. ஈசுவரமூர்த்தி

வ.ஈசுவரமூர்த்தி அவர்கள் 1934–ல் கோவையை அடுத்த பிச்சானூர் கிராமத்தில் திரு. வடமலைக்கவுண்டர் – திருமதி வள்ளியம்மாள் தம்பதியினருக்க மகனாகப் பிறந்தார். பாண்டியன் கூட்டததைச் சேர்ந்த அவர் செண்பகவல்லி அவர்களை துணைவியாகப் பெற்றார். ஈசுவரமூர்த்தி – செண்பகவள்ளி தம்பதியினருக்கு ஒரு மகன் உள்ளார்.

கோவை ராமகிருஷ்ன மிஷன் வித்யாலய பள்ளியில் கல்வி பெற்று, சென்னை பச்சையப்பன் கல்லூரியில் 1955–ல் தமிழ் மொழியில் பட்டம் பெற்று, மேற்கு வங்கத்தில் தாகூர் நிறுவிய சாந்திநிகேதன் விஸ்வபாரதி பல்கலைக்கழகத்திலும், அதன்பிறகு இங்கிலாந்து ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் தத்துவம், அரசியல், பொருளாதாரத்தில் உயர் கல்வி பெற்று, 1962–ல் உலக நாடுகள் பலவற்றில் பயணம் செய்தபிறகு இந்தியா திரும்பினார். உடனே ‘சர்வதேசக் கல்விக் கழகம்’, என்ற பெயரில் சொந்த ஊரில் கல்வி நிறுவனம் தொடங்கினார். தனக்குக் கிடைத்த மூதாதையர் நிலங்களை அந்தக் கல்விக் கழகத்திற்கு இலவசமாகக் கொடுத்தார். அங்குத் தொடங்கப்பட்ட சர்வதேச உயர்நிலைப் பள்ளியை 1963–ல் நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார் திறந்து வைத்தார்.

1962–ல் காமராசர் காங்கிரஸ் கட்சித் தலைவரான போது அவரோடு இணைந்து செயல்பட்டார். 1967– தேர்தல் இலக்கியம், தேர்தல் அறிக்கைகள், துண்டுப் பிரசுரங்கள் ஆகியவற்றைத் தயாரிக்கும் பொறுப்பு அவரிடம் அளிக்கப்பட்டது.

1968–ல் கோவை மண்டலத்தில் மேலவை உறுப்பினர் பதவிக்கு சுயேச்சையாகப் போட்டியிட்டு வெற்றி பெற்று 6 ஆண்டுகள் உறுப்பினராக இருந்தார். மேலவையில் அவர் அண்ணாவுடன் வாதம் செய்த போதும், ஆங்கிலத்தில் உரையாற்றும் வல்லமையையும் கண்ணுற்ற ராஜாசர் முத்தையா செட்டியார், டாக்டர். சர்.ஏ. லட்சுமணசாமி முதலியார் ஆகியோரால் பெரிதும் பாராட்டப்பட்டார்.

இங்கிலாந்தில் ஆக்ஸ்போர்டு கல்லூரியில் படிக்கும்போது இந்திய மாணவர் சங்கத் தலைவராக இருந்தார். 'லேபர் கிளப்' உறுப்பினராகவும், கவிதைப் குழு உறுப்பினராகவும் இருந்து ஏராளமான விவாதங்களில் பங்கேற்றார். உலகப் புகழ் பெற்ற இலக்கியப் படைப்பாளிகள், கவிஞர்கள், நோபல் பரிசு பெற்ற ஜே.ஆர்.டி.ஹிக்ஸ், அமர்த்தியா சென், ஆங்கில மொழி கவிஞர் டாம் மொரோஸ், மலையாள எழுத்தாளர் கமலாதாஸ், மகாகவி வள்ளத்தோள், ஞான பீட விருது பெற்ற தகழி சிவசங்கரம்பிள்ளை, பத்மவிபூசன் டாக்டர் முல்க்ராஜ், கே.ஏ.அப்பாஸ் போன்ற எண்ணற்ற பெரியோர்கள் இவருக்கு உற்ற நண்பர்களாக விளங்கினர்.


பேரறிஞர் அண்ணா, பெரியார், மூக்கையா தேவர், ஈ.வெ.கி. சம்பத், கலைஞர், எம்.ஜி.ஆர். போன்றவர்களோடு நெருக்கமான நட்பு கொண்டிருந்தார். உயிர் நுட்ப இயல் ஆய்வு, தொழில், தொழில் நுட்பம், தொழிற்சாலை, மின்னணுப்புரட்சி, கல்வித்துறை பற்றியும் மற்றும் பல்வேறு தலைப்புகளில் ஆய்வு நூல்கள் படைத்தவர். தற்போது அவரது பல நூல்கள் அச்சில் உள்ளன. அவற்றில் 'எனது சுதந்திரத்திற்குக் கொடுத்த விலை அதிகம்' என்ற தலைப்பில் அவருடைய சுயசரிதையாக 870 பக்க நூல் அச்சில் உள்ளது.

1961ல் இங்கிலாந்தில் ஆக்ஸ்போர்டு வாழ்க்கை, 1962ல்– லண்டன் முதல் மாஸ்கோ வரை, 1965–ல் கல்வி ஒரு மதிப்பீடு, 1965ல் பிச்சனூர் கவிதைகள் முதலியன இவர் எழுதிய தமிழ் நூல்கள்.

வளரும் தமிழகம், அஸ்வரிய கன்னடநாடு, அஸ்வரிய கேரளம் பத்திரிகைகளையும், Agriculture & Industry Survey, School, "Journal of Education" போன்ற வெளியீடுகளை தன் வடமலை மீடியா நிறுவனத்தின் மூலம் நடத்தி வருகிறார்.

கொங்கு நாட்டிற்கும், தமிழகத்திற்கும் பெரும்புகழ் சேர்த்திட்ட பல்துறை வித்தகர், உலகளாவிய சிந்தனையாளர் ஈசுவரமூர்த்தி அவர்களுக்கு "சாதனையாளர் விருது" வழங்கி கௌரவிப்பதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமையடைகிறது.

## சாதனையாளர்



## யு.ஆர். சின்னுசாமிக் கவுண்டர்.

கொங்கு நாட்டு மக்களால் யு.ஆர்.சி என்று அன்போடு அழைக்கப்படும் யு.ஆர். சின்னுவாமிக் கவுண்டர் அவர்கள் **1931–**ல் ஈரோடு, அறச்சலூர் ஊஞ்சப்பாளையத்தில் திரு. ராமசாமிக்கவுண்டர் – திருமதி பழனியம்மாள் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். ஆரம்பக் கல்வியை மட்டுமே பெற்ற சாதாரண விவசாயி மகன் யு.ஆர்.சி. , அவர்கள் இன்றைக்கு, மாபெரும் தொழில் அதிபராகத் திகழ்கிறார்.

அமைதியான மனிதருக்கு, ஆற்றல் மிக்க மனிதருக்கு உதாரணம் காட்ட வேண்டுமானால் அதற்கும் யு.ஆர்.சி. அவர்களையே காட்டலாம். அன்னார் தொடங்கிய யு.ஆர்.சி. கட்டிடக் கட்டுமானத் தொழில் நிறுவனம் நாட்டில் புகழ்பெற்ற ஒரு நிறுவனமாகும்.

**1946–**ல் துளசியம்மாள் அவர்களைத் தன் வாழ்க்கைத் துணையாகப் பெற்றார். சின்னுசாமிக் கவுண்டர் – துளசியம்மாள் தம்பதியினருக்கு இரண்டு மகன்கள், ஒரு பெண் உள்ளனர்.

விவசாயியாக வாழ்க்கையைத் தொடங்கிய அவர் அ.அனுமன்பள்ளி ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தார்.

புகழ்பெற்ற கொங்கு தொழில் நுட்பக் கல்வி அறக்கட்டளையின் நிறுவனத் தலைவராக புகழ் பெற்றவர்.

யு.ஆர்.சி. கல்வி அறக்கட்டளையின் தலைவராகவும் உள்ளார்.

திண்டல் யு.ஆர்.சி. பழனியம்மாள் மெட்ரிக் மேனிலைப் பள்ளியின் தலைவராகவும் இருக்கிறார்.

மு. அனுமன்பள்ளி அம்மன் நற்பணி மன்றத் தலைவராக இருந்து பொதுத் தொண்டாற்றி வருகிறார்.

மு. அனுமன் பள்ளி சின்னம்மன் – பெரியம்மன் கோயில் திருப்பணிக்குழுத் தலைவராக இருந்து ஆன்மீகப் பணியாற்றி வருகிறார்!

திண்டல் வேளாளர் மகளிர் கல்வி நிறுவனங்களின் பொதுக் குழு உறுப்பினராக பொறுப்பு வகிக்கிறார்.


மு. அனுமன்பள்ளி அரசு உயர்நிலைப் பள்ளி கட்டிடக் குழுவின் தலைவராகவும் இருந்து நற்பணிகளில் ஈடுபட்டுள்ளார்.

இன்றைய இளைஞர்கட்கு யு.ஆர்.சி. அவர்களின் வாழ்க்கை ஒரு பாடமாகும். கொங்கு சமூக மக்களுக்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறார். யு.ஆர்.சி. அவர்கள்!

கல்லூரியில் படிக்காமலே, தொழில் துறையிலும். கல்விப் பணியிலும் அளப்பரிய சாதனைகளைப் படைத்த மாமனிதர் யு.ஆர். சின்னுசாமிக் கவுண்டர் அவர்கள். தன்னுடைய கடின உழைப்பாலும், தார்மீக சிந்தனையாலும் மிகப் பெரிய நிறுவனத்தை நடத்தி, கல்வி, ஆன்மீகம், மற்றும் சமுதாய சேவை ஆற்றுவதில் ஓர் உன்னதமான நிலையில் இருந்து வருபவர் யு.ஆர்.சி. அவர்கள்.

கொங்குச் சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் பெருமை சேர்த்த அன்னார் அவர்களுக்கு ‘சாதனையாளர் விருது’ வழங்கி கௌரவிப்பதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமையடைகிறது.

## சாதனையாளர்



## ம. குமாரசாமி

கடுமையான உழைப்பும், தொலைநோக்கும், தன்னம்பிக்கையும் இருந்தால் குக்கிராமத்தில் பிறந்து பட்டம் பெறாதவர்கள் கூடக் கல்லூரி தொடங்கமுடியும் என்பதற்கு சிறந்த உதாரணமாகத் திகழ்பவர் திரு. ம.குமாரசாமி அவர்கள்!

திரு. மலையண்கவுண்டர் – திருமதி இராசாயி அம்மாள் தம்பதியினருக்கு 1933–ல் கரூர்– தளவாபாளையத்தில் பிறந்து புகளூர் சர்க்கரை ஆலை நடுநிலைப்பள்ளி, கரூர் உயர்நிலைப்பள்ளி ஆகியவற்றில் படித்து, கல்லூரியில் படிக்கும் வாய்ப்பைப் பெற முடியாமல் விவசாயத்தில் ஈடுபட்டார். 25–ஆண்டுகள் தோட்டக்குறிச்சி கிராம மணியமாகப் பணிபுரிந்தார்.

1980–ல் பஸ் டிரான்ஸ்போர்ட் தொழிலைத் தொடங்கினார். தொடர்ந்து 35–ஏக்கர் பரப்பில் கோழிப் பண்ணை தொடங்கினார். நேரடி ஈடுபாட்டாலும், கடும் உழைப்பாலும் தொழிலில் நல்ல வளர்ச்சியை அடைந்தார். சுமார் 60 ஏக்கர் பரப்பில் தென்னந் தோப்பு ஒன்றை உருவாக்கினார். 2000 – ஆண்டில் தனது சொந்த ஊரான தளவா பாளையத்தில் தன்பெயரில் பொறியியல் கல்லூரி ஒன்றைத் தொடங்கினார். கரூர்–சேலம் நெடுஞ்சாலையில் 50–ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள இக்கல்லூரியில் நல்ல, தரமான மாணவர் விடுதியும், 2 லட்சம் சதுர அடியில் கல்லூரிக் கட்டிடங்களும் கட்டப்பட்டுள்ளன. அதிநவீன ஆய்வுக் கூடம், அருமையாக வடிவமைக்கப்பட்ட கணிப்பொறி வளாகம் ஆகியன கிராமப்புற மாணவர்களின் கல்விக்குப் பெரும் பயனளிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. மாநில அளவில் நடந்த தேர்வுகளில் (229–கல்லூரிகளில்) இக்கல்லூரிக்கு 38ம் இடம் கிடைத்துள்ளது.


வசதிக் குறைவான வேளாண்குடி மாணவர்கட்குச் சலுகைக் கட்டணம் அளித்துள்ளார். வேலை வாய்பிலும் வட்டார வேளாண் குடிமக்களுக்கு முன்னுரிமை

அளித்துள்ளார். இவை அனைத்திற்கும் மேலாக கொங்கு வேளாளர் சமூக நலனில் பெரிதும் ஆர்வம் கொண்டு, சமுதாய மேம்பாட்டுக் காரியங்கட்கு, தாராளமாக நிதியுதவி செய்கிறார்.

கல்லூரியில் படிக்க முடியாமல் போனாலும், வட்டாரமக்களின் வசதிக்காக சொந்த ஊரிலேயே கல்லூரியைத் தொடங்கி, தொலை நோக்குப் பார்வையுடன் செயல்பட்டு, சமுதாயப்பணியாற்றி வரும் குமாரசாமி அவர்கள் கொங்குச் சமுதாயத்திற்கு தம்மை அர்ப்பணித்துள்ளார்.

கொங்குச் சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் பெருமை சேர்த்த அன்னார் அவர்களுக்கு ‘சாதனையாளர் விருது’ வழங்கி கௌரவிப்பதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமையடைகிறது.

## சாதனையாளர்



## டாக்டர் வி. செல்லப்பன்

திரு. வேலப்ப கவுண்டர் – திருமதி காமாட்சியம்மாள் தம்பதியினருக்கு 1929–ம் ஆண்டு கரூர் – நெரூர் வடபாகம் – பெரியகாளி பாளையத்தில் பிறந்தார். மணியன் கூட்டத்தைச் சேர்ந்த டாக்டர் செல்லப்பன் சொந்த விவசாய வேலையை கவனித்துக் கொண்டே பள்ளிப் படிப்பை முடித்து சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் படிப்பை முடித்து கால்நடைத்துறையில் பணியாற்றி 1987–ல் ஓய்வு பெற்றார். 1987–ல் கரூர் வட்ட கொங்கு நண்பர்கள் சங்கத் தலைவரானார். 1995–ல் மாவட்ட கொங்கு நண்பர்கள் சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1992–ல் கரூர் கொங்கு வேளாளர் திருமண மண்டபக் குழுத் தலைவராகப் பொறுப்பேற்றார். கொங்கு மெட்ரிகுலேஷன் பள்ளி மற்றும் கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆரம்பிப்பதற்குப் பேருதவியாக இருந்தவர்.

1994–ல் கரூரில் நடைபெற்ற கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவை மாநாட்டின் நிதிக்குழுப் பொறுப்பாளராக இருந்து பணியாற்றி மாநாடு பெரும் வெற்றியடையக் காரணமாக இருந்தார். 1994–ல் கரூர் கொங்கு கல்வி அறக்கட்டளை உருவாகப் பாடுபட்டவர். அறக்கட்டளை துவக்கப்பட்டதிலிருந்து அதன் கட்டிடக் குழுத் தலைவராகப் பணியாற்றினார்.

கரூரில் மூதறிஞர் டாக்டர் வா. செ. குழந்தைசாமி அறக்கட்டளை உருவாகிடவும், தொடர்ந்து அதன் வளர்ச்சியிலும் முக்கியப் பங்காற்றி வருகிறார்.

மாவட்ட அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ மாணவிகட்குப் பரிசுகள் வழங்கி ஊக்கப்படுத்தும் முயற்சி பெரு வெற்றியடைந்ததில் அவர் பங்கு குறிப்பிடத்தக்கது.

டாக்டர் செல்லப்பன் அவர்கள் தனது மகனுக்கும், இரண்டு மகள்கட்கும் நல்ல கல்விச் செல்வத்தை அளித்தார். அதன் காரணமாக அவர்களின் குழந்தைகள், இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் மிகவும் பெருமைப்படத்தக்க அளவில் பணியாற்றுகின்றனர்.

கொங்கு வேளாளர் சமுதாய அமைப்புகள் இன்று அடைந்துள்ள வெற்றிக்கும், வளர்ச்சிக்கும், டாக்டர் செல்லப்பன் அவர்களின் பங்கு கணிசமானதாகும். சென்னை கொங்கு நண்பர்கள் சங்கக் கட்டிட நிதிக்காகச் சென்ற போது உடனிருந்து உதவி செய்ததுடன், கரூர் சங்கத்தின் சார்பாக ரூ. 25,000/– ரூயாய் நன்கொடையும் அளித்தார்.

கொங்குச் சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் பெருமை சேர்த்த அன்னார் அவர்களுக்கு ‘கொங்கு சாதனையாளர் விருது’ வழங்கி கௌரவிப்பதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமையடைகிறது.

## சாதனையாளர்



## ஆசிரியர் தி.செ. பழனிவேலு

1930–ம் ஆண்டு நாமக்கல் – திண்டமங்கலம் கிராமத்தில் திரு.செங்கோட்டு வேலு – திருமதி முத்தாயம்மாள் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். 1952–ம் ஆண்டு பெருமு அம்மையார் பழனிவேலு அவர்களின் வாழ்க்கைத் துணையாக அமைந்தார்கள். பழனிவேலு– பெருமு அம்மையார் தம்பதியினருக்கு ஒரு மகனும், இரண்டு மகள்களும் உள்ளனர்.

கல்வித்துறையில் 33– ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றிய பின் 1991–ல் ஓய்வு பெற்றார். இயல்பிலேயே சமுதாய உணர்வு நிரம்பப் பெற்ற பழனிவேலு அவர்கள் கொங்கு நாட்டு வேளாளர் சமுதாய அமைப்புப் பணியில் தீவிரமாக ஈடுபட்டார். ராசீபுரத்தைத் தலைமையகமாகக் கொண்ட கொங்கு நாட்டு வேளாளர் அறக்கட்டளையின் சார்பாக வெளிவரும் இருமாத இதழான “கொங்குச் செய்தி” யின் சிறப்பு ஆசிரியராக உள்ளார். தமிழ்மொழிப் பற்றும், தமிழ் இன உணர்வும் நிரம்பப் பெற்ற திரு. பழனிவேலு இராசீபுரம் தமிழ்ச் சங்கத்தின் உறுப்பினராகவும், அந்த அமைப்பின் ஆலோசகராகவும் உள்ளார். இராசீபுரம் பகுதி தொப்பம்பட்டியில் உள்ள ஸ்ரீ வாணி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியின் ஆலோசகராகவும் உள்ளார்.

சேலம் கொங்கு நாட்டு வேளாளர்கள் நலச் சங்கத்தின் கௌரவத் தலைவராகவும் உள்ளார்.

சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் கொங்கு வேளாளர் சங்கங்கள் கூட்டமைப்பின் ஆலோசனைக் குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகிக்கிறார்.

நாமகிரிப்பேட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் பெற்றோர் – ஆசிரியர் கழகத் தலைவராகவும் உள்ளார்.

**1971**–ல் சேலம் சாரதா கல்லூரி வளாகத்தில் **60**–வது மாநிலக் கல்வி மாநாடு, தமிழ்நாடு ஆசிரியர் கழகத்தின் சார்பாக நடைபெற்றது. தி.செ. பழனிவேலு அவர்கள் மாநாட்டுச் செயலாளராக இருந்து மாநாட்டு வெற்றிக்குப் பாடுபட்டார். அம்மாநாட்டில் யுனெஸ்கோ முன்னாள் பொதுச் செயலர் மால்கம் ஆதிசேசய்யா, தமிழகக் கல்வித் துறைச் செயலர் கே. திரவியம், கல்வித்துறை இயக்குநர் செ. வே. சிட்டிபாபு மற்றும் பெருமக்கள் பலர் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. **1991**–ல் கொங்கு நாட்டு வேளாளர் அறக்கட்டளை நிறுவும் முயற்சியில் அமரர் அரூர் முத்துக் கவுண்டர் அவர்களுடன் இணைந்து, சுமார் **70**–லட்ச ரூபாய் நன்கொடை வசூலித்து இராசீபுரம் நகரில் கொங்கு சமுதாயக் கூடம் அமைவதற்கு முக்கியப் பங்காற்றியவர்.

**2004**–ல் இருந்து கொங்கு நாட்டு வேளாளர் அறக்கட்டளையின் முதன்மை ஆலோசகராகப் பொறப்பு வகிக்கிறார்.


**420**–பக்கங்கள் கொண்ட "கொங்கு நாட்டு வேளாளர் வரலாறு" என்னும் அற்புதமான வரலாற்றுப் பெட்டகத்தை உருவாக்க முனைவர், புலவர் செ. இராசு, கல்வெட்டு ஆய்வாளர் புலவர் வெ. இரா. துரைசாமி ஆகியோருடன் இணைந்து செயல்பட்டார்கள்.

கொங்கு வேளாளர்கள் சமூகத்தின் மேம்பாட்டில் பெரிதும் ஆர்வம் கொண்டுள்ள பழனிவேலு அவர்கள், சமுதாய நிகழ்ச்சிகள், விழாக்கள் எங்கு நடந்தாலும் தவறாமல் பங்கேற்றுச் சிறப்பித்து வருகிறார்கள். முதுமைக் காலத்திலும், சளைக்காமல் சுற்றுப் பயணம் செய்து சமுதாயத் தொண்டாற்றி வரும் சாதனையாளர் பழனிவேலு அவர்கள்.

கொங்கு வேளாளர் இனம் தனது நிலையினையும் வலிமையினையும் உணர்த்துவதுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு உரிமைகளைப் பெற வேண்டும் என்றும், இளைஞர்களுக்கு ஏற்றமிகு எதிர்காலம் உருவாக நற்கருத்துகளைத் தொகுத்து வழங்க வேண்டும் என்றும், மாசற்ற நிலம், நீர், காற்றை எதிர்காலச் சந்ததிக்கு விட்டு வைக்க வேண்டும் என்றும் கொங்கு இனமக்களை வேண்டுவதுடன் மூச்சுள்ள வரை என் கடன் பணி செய்து கிடப்பதே என்கிறார்.

கொங்குச் சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் பெருமை சேர்த்த அன்னார் அவர்களுக்கு 'கொங்கு சாதனையாளர் விருது' வழங்கி கௌரவிப்பதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமையடைகிறது.

# சாதனையாளர்



## டி.கே. சுப்ரமணியன்

டி.கே.எஸ். என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்படும் இவரை கொங்கு சமுதாயத்தில் அனைவரும் அறிவர். திரு. கருமாண்டக்கவுண்டர் – திருமதி கருப்பாயம்மாள் ஆகியோரின் மூத்த மகனாக, பெருந்துறை திருவேங்கிடம் பாளையத்தில் 12.04.1940 அன்று சாத்தந்தை கூட்டத்தில் பிறந்தார்.

1957–ல் பெருந்துறையில் பள்ளி இறுதிப்படிப்பை முடித்து, அரசு கதர்த் துறையில் ஓராண்டு பயிற்சி பெற்று, தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் பணியாற்றி, அதிலிருந்து 1960–ல் விலகி சென்னை வந்து தொழில்நுட்பப் பயிற்சி முடித்து, தனியார் நிறுவனத்தில் 1962 முதல் 1999 வரை பணியாற்றி ஓய்வு பெற்றார். 1965–ல் திருமணம், துணைவியார் சரஸ்வதி, இரண்டு பெண்கள், ஒரு ஆண். 1962–ல் பரங்கிமலையில் தி.மு.க. கிளை தொடங்கி செயலாளர், பெருளாளர் பொறுப்புகளை வகித்து, 1969–ல் முதன் முதலாக அண்ணாவுக்கு சிலை வைத்து, அப்போதய முதல்வர் கருணாநிதி, எம்.ஜி.ஆர்., தலைமையில் திறந்து வைத்ததில் முக்கியப் பங்காற்றினார்.

1973–ல் அரசியலில் இருந்து விலகி, கொங்கு நண்பர்கள் சங்கத்தின் தீவிர ஊழியரானார். 1968–ல் இருந்து சங்கத்திற்கு நூற்றுக் கணக்கில் உறுப்பினர்களைச் சேர்த்தார். 200 பேர் உறுப்பினர்களாக இருந்த சங்கத்தில் சுமார் 750 உறுப்பினர்களாக உயர்த்திய பெருமை இவரைச் சாரும். சங்கத்தின் அனைத்துப் பொறுப்புகளையும் வகித்து (தலைவர் தவிர) 1982–ல் சங்கத்திற்குச் சொந்த இடம் வாங்கியதில் பெரும் பங்கு பெற்றார். சங்கத்திற்கு இடம் வாங்க 1982–ல் மாநிலம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்தார். கொங்கு இல்லம் கட்டியதிலும், அதற்கான நிதி திரட்டியதிலும் முக்கியப் பங்காற்றினார். சமுதாயத்தின் பெரும் தொழிலதிபர்களையும், உயர் அரசு அதிகாரிகளையும் சமுதாயப்பணியில் ஈடுபடுத்துவதில் முக்கியப் பணிகாற்றினார். சென்னைச் கொங்கு


நண்பர்கள் சங்கப் பணிகளில் மட்டுமின்றி மாநில அளவில் சமுதாயச் சங்கங்கள் ஏற்பாடு செய்யும் விழாக்களிலும், ஏராளமான நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டார்.

**1989–**ல் கொங்கு நாடு அறக்கட்டளையை நிறுவி, அதன் பெயரில் சென்னையில் ஓர் ஏக்கர் நிலம் வாங்கியதில் முக்கியப் பங்காற்றினார். சமுதாயத்தின் அனைத்துச் சங்கங்களையும் ஒருங்கிணைக்கும் முயற்சியில் அவர் பங்கு குறிப்பிடத்தக்கது.

**1980–85** காலகட்டத்தில் தன் சொந்த ஊர் பெருந்துறையில் கொங்கு வேளாளர் கல்வி அறக்கட்டளை நிறுவி, அதன் மூலம் கொங்கு வேளாளர் மெட்ரிக் மேனிலைப்பள்ளி மற்றும் பெருந்துறை மருத்துவக் கல்லூரி தொடங்கப்படுவதற்குப் பெரும் பங்காற்றியவர்.

கொங்கு வேளாளர் சமூகத்திற்குச் சேவை செய்வதற்கு தன் துணைவியாரே காரணம். பெருமை எல்லாம் அவருக்குத்தான் என்று அடக்கமுடன் அவர் கூறுகிறார். தற்பொழுது கொங்குச் சமுதாயத்திற்காகவே “திருமண மாலை” திருமண மையத்தை சிறப்புடன் நடத்தி வருகின்றார். இதன் மூலம் உலகமெங்கும் இருக்கும் நம் இனமக்கள் பெரும்பயன் அடைகிறார்கள். கொங்குச் சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் பெருமை சேர்த்த அன்னார் அவர்களுக்கு “கொங்கு சாதனையாளர் விருது” வழங்கி கௌரவிப்பதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமையடைகிறது.

## சாதனையாளர்



## எஸ்.பி. கோபாலகிருஷ்ணன்

கொங்கு நாட்டில் பிறந்து வெளி ஊர் மற்றும் வெளி நாடுகளில் முத்திரை பதித்து, சாதனை படைத்த கொங்கு வேளாளர்கள் பலர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர் திரு. கோபாலகிருஷ்ணன். ஈரோட்டில் 1952ல் திரு. பழனியப்பகவுண்டர் – திருமதி லட்சுமியம்மாள் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். கண்ணன் கூட்டத்தைச் சேர்ந்த கோபாலகிருஷ்ணன், மதுரையில் குடியேறி அங்கு அரிசித் தொழில் தொடங்கி, அரிசி வியாபாரம், அரிசி ஆலைகள், தோழித் தீவன உற்பத்தி போன்றவைகளைத் தமிழ்நாட்டின் பல்வேறு ஊர்களில் தொடங்கினார். செய்யும் தொழிலே தெய்வம் என்பதற்கேற்ப, முழுமையான ஈடுபாட்டுடன் தொழில் செய்து சிறப்பான வளர்ச்சியை அடைந்தார். தான் சம்பாதித்த பணத்தில் ஒரு பகுதியை மக்கள் நல்வாழ்வுக்குச் செலவிட எண்ணினார். காந்தீயச் சிந்தனைகள் – என்ற பொருளில் முதுகலைப் பட்டம் பெற்றவர். தான் கற்ற கல்வி அந்த எண்ணத்திற்கு ஊக்கமாக அமைந்தது. 1979–ம் ஆண்டில் காந்திமதி அம்மையாரைத் தம் வாழ்க்கைத் துணையாக்கிக் கொண்டார். அவர்கட்கு இரண்டு மகன்கள் உள்ளனர்.


1985–ம் ஆண்டு மதுரையில் இந்திய பார்வையற்றோர் சங்கம் துவக்கப்பட்டது. 1995–ல் திரு. கோபாலகிருஷ்ணன் அச்சங்கத்திற்குத் தலைவராகப் பொறுப்பேற்றார். முழுமையான ஈடுபாட்டுடன் அச்சங்கத்தின் வளர்ச்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். தொடக்கத்தில் தன் சொந்தப் பணத்தில் லட்சக் கணக்கில் செலவு செய்து, சங்கத்திற்குத் தேவையான கட்டிடங்களைக் கட்டினார். மேலும் தனது உற்றார், நண்பர்களின் உதவியையும் நிரம்பப் பெற்று. பார்வையற்றோருக்கான மேல்நிலைப்பள்ளி உருவாகப் பாடுபட்டார். அங்கு பயிலு ம் பொருளாதார வசதியற்ற மாணவர்கட்கு, உணவு, உடை, கல்விச் செலவு, நூல்கள், போக்குவரத்து வசதி போன்றவற்றை இலவசமாக வழங்கினார்கள். பார்வையற்ற மாணவர்கட்குத் தொழிற்கல்வி அளிக்கவும், அதற்குத்


தேவையான கருவிகள் இயந்திரங்கள், சாதனங்கள் வாங்கவும் திரு. கோபாலகிருஷ்ணன் நிதியுதவி செய்தார்.

பார்வையற்றோருக்கான நூலகம் அமைக்கப்பட்டு, அதற்குத் தேவையான நூல்களை அங்கேயே தயாரித்தனர். தங்கள் நூலகத்திற்கு மட்டுமின்றி, மற்ற ஊர்களில் உள்ள நூலகங்கட்கும் நூல்களை இலவசமாக வழங்கினார். பார்வையற்றோருக்கான ஒரு மாதிரி நூலகமாக அது பெருமை பெற்றுள்ளது.

பார்வையற்ற மாணவர்கள் ஒவ்வொருவரின் திறமையைக் கணித்து. அதற்கேற்ப தனிப்பயிற்சியும் அளிக்கப்படுகிறது. நுண்கலைகளில் ஆர்வம் கொண்ட மாணவர்கட்கு, தேவையான இசைக் கருவிகளை வழங்கி, பல்வேறு விழாக்கள், பொதுநிகழ்ச்சிகளில் இசை நிகழ்ச்சிகள் செய்யவும் வாய்ப்புகளை உருவாக்கியுள்ளார். அவர் தலைமையில் இயங்கும் இந்தியப் பார்வையற்றோர் சங்கம், அகில இந்திய அளவில் பல்வேறு விருதுகளையும் பெருமையையும் பெற்றுள்ளது. ஜாதி, மதத்திற்கு அப்பாற்பட்டு மனிதகுல சேவைக்கு தன்னை அர்ப்பணித்துள்ள திரு. கோபாலகிருஷ்ணன் அவர்களைப் பலரும் பாராட்டுகின்றனர். கொங்கு சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் பெருமை சேர்ந்த அன்னார் அவர்களுக்கு “கொங்கு சாதனையாளர் விருது” வழங்கி கௌரவிப்பதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமையடைகிறது.

## சாதனையாளர்கள்





**ஆ. இராமசாமி** **பெ. சாமிநாதன்**

செய்யும் தொழிலே தெய்வம்! தான் மேற்கொண்ட பணியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து, ஈடுபாட்டுடன் செய்பவர், தெய்வத்தின் பார்வையில் உயர்ந்தவராகிறார்! தெய்வத்தின் அன்புக்குப் பாத்திரமாகிறார்! அந்த வகையில் நாமக்கல் மாவட்டம் இராசீபுரம் எஸ்.ஆர்.வி. மேனிலைப்பள்ளி நிர்வாகிகள் அதற்கு உதாரணமாகத் திகழ்கிறார்கள். தற்சமயம் அப்பள்ளியின் தலைவராக அ.இராமசாமி அவர்களும், தாளாளராக பெ. சாமிநாதன் அவர்களும் பொறுப்பு வகிக்கிறார்கள்.

"எஸ்.ஆர்.வி" பள்ளி என்று அழைக்கப்படும் அப்பள்ளி, நாட்டின் தலைசிறந்த கல்வி நிறுவனங்களில் ஒன்றாகப் புகழ் பெற்றுள்ளது. பொறியியல், மருத்துவம் ஆகிய துறைகளில் அதிகமான மாணவர்களை உருவாக்குகின்ற பள்ளி என்ற பெயரைப் பெற்று விளங்குவது அனைவருக்கும் தெரியும்.

1984–ல், சாமிநாதன், குமரவேல், செல்வராசன், ஏ.ஆர். துரைசாமி,சரோஜா, வஜ்ரவேல் ஆகிய ஆசிரியர்கள் ஒருங்கிணைந்து "எஸ்.ஆர்.வி. கோச்சிங் சென்டர்" அமைப்பைத் தொடங்கினர். அவர்கள் அளித்த பயிற்சியின் விளைவாக நூற்றுக்கணக்கான மாணவ, மாணவிகள், மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் இடம் பெற்றனர். தொடர்ந்து 1996–ல் எஸ்.ஆர்.வி. மேனிலைப் பள்ளியைத் தொடங்கி +1,+2, வகுப்புகளைத் துவக்கினர். திறமையானவர்கள் சிலர் ஒருங்கிணைந்து முழுமையான ஈடுபாட்டுடன் செயல்பட்டால் மாபெரும் வெற்றி கிடைக்கும் என்பதற்கு எஸ்ஆர்.வி. கல்வி நிறுவனம் ஒரு நல்ல எடுத்துக் காட்டு! தற்சமயம் எஸ்.ஆர்.வி. கல்வி நிறுவனத்தின் தலைவராக அ.இராமசாமி அவர்கள் பொறுப்பேற்றுள்ளார் : 1945–ல், ராசீபுரம் – குருக்கபுரம் கிராமத்தில் திரு. அத்தியப்ப கவுண்டர் – திருமதி பாவாயி அம்மாள் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். 1970–ல் லட்சுமி அவர்களைத் திருமணம் செய்து

கொண்டார். அவர்கட்கு இரண்டு மகன்கள் உள்ளனர். விழியன் குலத்தைச் சேர்ந்த ராமசாமி அவர்கள் சேலம், அரசு கலைக்கல்லூரியில் பி.எஸ்சி தேர்ச்சி பெற்று அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் எம்.எஸ்சி. பட்டம் பெற்றார். சென்னை பல்கலைக்கழகத்தில் எம்.ஏ. பட்டம் பெற்றார். எம்.எட். பட்டம் பெற்றவுடன் 1969–ல் ஆசிரியராகச் சேர்ந்தார். 1978–ல் ராசீபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியில் முதுகலைப்பாட ஆசிரியராக உயர்வு பெற்றார். அப்பள்ளியில் ஆசிரியர்களின் கூட்டு முயற்சியால் 50–க்கும் மேற்பட்ட மாணவர்கள் மருத்துவக் கல்வி பயில இடம் பெற்றனர்.

எஸ்.ஆர்.வி. பள்ளியின் தாளாளராக சாமிநாதன் அவர்கள் பொறுப்பேற்றுள்ளார். 1952–ல் திரு. பெரியசாமி – திருமதி பாவாயி அம்மாள் தம்பதியினருக்கு, ராசீபுரத்தில் மகனாகப் பிறந்தார். காடை கூட்டத்தைச் சேர்ந்த சாமிநாதன் 1979–ல் பானுமதி அவர்களை மணம் புரிந்தார். அவர்கட்கு இரண்டு பெண்கள் உள்ளனர். பள்ளிப்படிப்பை ராசீபுரத்தில் முடித்து, திருப்பத்தூர் “எஸ்.ஹெச்.சி” கல்லூரியில், பி.எஸ்சி; பட்டம் பெற்று அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் எம்.எஸ்சி மற்றும் எம்.எட், பட்டங்களைப் பெற்றார்.


1976 முதல் 1979 – வரை பெங்களூர் வானிலை ஆய்வு மையத்தில் பணிபுரிந்தார்.

1979–ல் பள்ளி ஆசிரியராகச் சேர்ந்தார்.

திரு. சாமிநாதன் கல்விக்காக ஆற்றிய சாதனைக்காக “சிறந்த இந்தியக் குடிமகன்” விருது பெற்றுள்ளார்.

“ஒற்றுமையே உயர்வு தரும்” என்பதை மெய்ப்பித்து, கற்பித்தலில் நாட்டிலேயே பிரமிக்கத்தக்க சாதனை படைத்து வரும் எஸ்.ஆர்.வி. பள்ளி நிர்வாகிகள் அனைவருக்கும், அவர்கள் ஆற்றி வரும் சிறந்த கல்வி பணிக்காக அப்பள்ளி நிர்வாகத்தின் சார்பில் தற்சமயம் தலைவராகப் பொறுப்பு வகிக்கும் திரு. இராமசாமி அவர்கட்கும், தாளாளராகப் பொறுப்பு வசிக்கும் திரு. சாமிநாதன் அவர்கட்கும், ‘கொங்கு சாதனையாளர் விருது’ வழங்கி பெருமைப்படுத்துவதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமிதம் அடைகிறது.

## சாதனையாளர்



## கே.ஜி. பிரகதீஸ்குமார்

விவசாயத் துறையில் நம்பிக்கை இழந்து, உத்தியோகம், தொழில், வியாபாரம் என ஓடிக் கொண்டிருக்கும் இன்றைய இளைஞர்களைத் திரும்பிப் பார்க்க வைத்திருப்பவர் கள்ளிப்பட்டி பிரகதீஸ்குமார் அவர்கள்! விவசாயத்திலும் வெற்றி பெற முடியும் என்று நிரூபித்துவருபவர்!

ஓதாளன் கூட்டத்தைச் சேர்ந்த பிரகதீஸ் குமார், 1963–ல் திரு. கோபால் கவுண்டர் – திருமதி ஈசுவரி தம்பதியினருக்கு, கள்ளிப்பட்டியை அடுத்த பெருமுகைப்புதூரில் மகனாகப் பிறந்தார்.

கோவை பூ.ச.கோ.கலைக்கல்லூரியில் பி.ஏ. படித்து முடித்ததும், விவசாயத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டார்.

1987–ல் சித்ரா அவர்களைத் திருமணம் செய்து கொண்டார். பிரகதீஸ்குமார்– சித்ரா தம்பதியினக்கு இரண்டு பெண்கள் உள்ளனர்.

விவசாயத்தில் பேரார்வத்துடன் ஈடுபட்டுள்ள அவர், திரையரங்கம், அரிசி ஆலை, பட்டுப்புழு வளர்ப்பு போன்ற தொழில்களையும் சிறப்பாகச் செய்து வருகிறார். தேசிய விவசாயிகள் விழிப்புணர்வு இயக்கத்தின் மாவட்டப் பொருளாளராக உள்ளார்.

“நாம் உழவர்” மாத இதழ் ஆலோசகராகவும் உள்ளார்.

மாவட்டத்தின் பல்வேறு அமைப்புகளில் உறுப்பினராக இருந்து மக்கள் தொடர்பை சிறப்பாகப் பெற்று விளங்குகிறார்.

1998–முதல் 2002– வரை கரும்பு உற்பத்தியில் முதன்மையானவராகப் பரிசு பெற்றுள்ளார்.

விவசாயத்தில் நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவதில் மற்றவர்கட்கு முன்னோடியாகத் திகழ்கிறார். இயந்திரம் மூலம் நெல், கரும்பு அறுவடையை முதலில் தொடங்கியவர், கரும்பு நடுவதில், சொட்டு நீர்ப்பாசனத்தில் புதிய உத்திகளைப் புகுத்தியவர்.

நூற்றுக்கணக்கில் கால்நடைகளை வளர்ப்பதன் மூலம் பயிர்களுக்கு இயற்கை உரம் தயாரித்தும் வருகிறார்.

- அரசு விதைப் பண்ணைச் சான்றிதழ் பெற்ற விதை நெல் உண்பத்தியாளர்
- விவசாயப் பல்கலை கழகத்துடன் இணைந்து புதிய நெல் ரகங்கள் பயிர் செய்வது
- தொடர்ந்த மஞ்சள் சாகுபடி, புதிய ரக மஞ்சள் சாகுபடி
- அதிக நபர்களுக்கு வேலை வாய்ப்பு
- சிறந்த பண்ணைப் பராமரிப்பு
- இயற்கை உரம் தயாரிப்பு

போன்ற சாதனைகளைத் தொடர்ந்து செய்து வருகிறார்.

படித்த இளைஞர்கள் விவசாயத்தை வெற்றிகரமாகச் செய்ய முடியும் என நிரூபித்து, அவர்கட்கு வழிகாட்டியாகவும், சிறந்த உதாரணமாகவும் திகழ்ந்து விவசாயத்தில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டுள்ளார்.

கொங்குச் சமதாயத்திற்கும், நாட்டிற்கும் பெருமை சேர்த்த அன்னார் அவர்களுக்கு ‘கொங்கு சாதனையாளர் விருது’ வழங்கி கௌரவிப்பதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமையடைகிறது.

# சாதனையாளர்



## டாக்டர். எஸ். தனபாக்யம்

கால்பதித்த துறைகளில் எல்லாம் தனிமுத்திரை பதித்து சாதனை படைத்துவரும் கொங்கு வேளாளர் பெண்மணிகள், மருத்துவத்துறையிலும் வெற்றிக் கொடி நாட்டி உள்ளனர். 1958–ல் ஈரோடு வட்டக்கல்வலசு கிராமத்தில் திரு. சொக்கப்ப கவுண்டர் – திருமதி பழனியம்மாள் தம்பதியினருக்கு மகளாகப் பிறந்தவர் தனபாக்யம் அவர்கள். 1977–ல் டாக்டர் கந்தசாமி அவர்களைத் திருமணம் செய்து கொண்டார். அவர்களுக்கு ஒரு மகன் உள்ளார்.

1978–ல் சென்னை எத்திராஜ் கல்லூரியில் பி.எஸ்சி. பட்டம், 1984–ல் சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் எம்.பி.பி.எஸ். பட்டம், 1994–ல் மணிபால் மருத்துவக் கல்லூரியில் எம்.டி. பட்டம் பெற்றார். 1994–ல் ஈரோட்டில் 'சுதா மகப்பேறு மருத்துவமனை' தெடங்கினார்கள். 1995 முதல் 1997 வரை ஈரோடு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் பணிபுரிந்தார். 1997–ல் "Indian Society for Assisted Reproduction" என்ற அமைப்பின் உறுப்பினரானார். 1998–ல் "Hystero laparoscopie" என்ற மையத்தைத் தொடங்கி இன்று வரை 3000 அறுவை சிகிச்சைகளைச் செய்து சாதனை படைத்துள்ளார். மக்கட்பேறில்லாத தம்பதிகளின் தேவைக்காக Hi-Tech IVF Central என்ற உயர் நுட்ப மையத்தை ஆராம்பித்து இதுவரை சமார் 4000 தம்பதியினருக்கு குழந்தைப்பேறு கிடைக்க உதவியுள்ளார். 1999ல் முதல் முறையாக செயற்கைக் கருத்தரிப்பு மூலம் முதல் குழந்தையை உருவாக்கினார். அதைத் தொடர்ந்து இன்றுவரை பல்வேறு சாதனைகளை மகப்பேறு மற்றும் செயற்கை கருத்தரிப்பு மருத்துவத்தில் செய்துள்ளார்கள்.

பல்வேறு அதிநுட்பச் செயல் முறைகளினால் ஆயிரக்கணக்கான தம்பதியினரை மக்கட்பேறு பெறச் செய்தமைக்காக, 2001–ல் ஈரோட்டில் நடைபெற்ற மாநில மருத்துவத்துறை மாநாட்டில் டாக்டர் தனபாக்யம் அவர்கட்கு விருது வழங்கிப் பெருமைப்படுத்தினர்.


**2001 –** முதல் **2003** வரை "O&G Society" யின் செயலாளராகவும், "FOGSI-Foreign Exchange" குழுவின் தென் மண்டலப் பிரதிநிதியாகவும், **2003** முதல் துணைத்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். **2001–**ல் முதன் முதலாக ஈரோட்டில் நடைபெற்ற "Lapro Hysterosopic" பற்றிய செயல்முறை வகுப்பை நேரடியாக நடத்திச் சாதனை படைத்தார்.

**2002–**ல் "IVF Update" மற்றும் "IUI ஆகியவற்றின் செயல் முறைப் பயிற்சிகளை முதன் முறையாக நடத்திச் சாதனை படைத்தவர். "O&G Society" யின் செயலராக இருந்தபோது, தன் துறை சார்ந்த **20** சந்திப்பு நிகழ்ச்சிகளை நடத்திப் பாராட்டுப் பெற்றவர்.

**2003–**ல் தன் துறை சார்ந்த தேசிய அளவிலான அமைப்புத் தலைவர் பொறுப்பேற்று மும்பையில் நடைபெற்ற சர்வதேசக் கருத்தரிப்பு மாநாட்டில் செயல் அறிக்கை சமர்ப்பித்து அனைவரின் பாராட்டையும் பெற்று, விருதையும் பெற்றார். பிரசவம், மகப்பேறு மருத்துவத்தில் தன் பணி சார்ந்த செயல் அறிக்கைகளை பல்வேறு மருத்துவ இதழ்களில் பிரசுரிக்கப்பட்டு உலகளவில் பாராட்டப்பட்டார்.

மருத்துவத்தில் தன் துறையில் மிகச் குறுகிய காலத்தில் மாபெரும் சாதனை படைத்தவர் டாக்டர் தனபாக்யம் அவர்கள். சென்னையில் கல்லூரி மாணவியாக இருந்த போது, சென்னை கொங்கு மாணவர் அணியில் மகளிர் அணிச் செயலாளராக இருந்தார். மகப்பேறு மருத்துவத்தில் சாதனை படைத்த புதுமைப்பெண், கண்ணன் கூட்டத்தைச் சேர்ந்த டாக்டர் தனபாக்யம் அவர்களால் நாட்டிற்கும், தமிழகத்திற்கும், கொங்கு இனத்திற்கும் பெருமை. அவர்களுக்கு 'கொங்கு சாதனையாளர்' விருதினை வழங்கி கௌரவிப்பதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமையடைகிறது.

## சாதனையாளர்



## டாக்டர் எம்.என். பொன்னுசாமி பிஎச்.டி

சென்னைப் பல்கலைக்கழகம்

திரு. நஞ்சப்பகவுண்டர் – திருமதி ராமாத்தாள் தம்பதியினருக்கு, கோவை, அன்னூர் மொண்டிக்காளி புதூர் கிராமத்தில் 1948–ம் ஆண்டு பிறந்தார். கிராமத்தில் பள்ளிப்படிப்பை முடித்து, கோவை பூ.சா.கோ. கல்லூரியில் 1971–ல் இயற்பியலில் இளங்கலைப்பட்டமும், 1973–ல் ராமகிருஷ்ண வித்யாலயா கல்லூரியில் முதுகலைப்பட்டமும், 1980–ல் இயற்பியலில் பிஎச்.டி. பட்டமும் பெற்றார்.

1982–ம் ஆண்டில் பாக்யலட்சுமி அம்மையாரை மணம் செய்து கொண்டார். டாக்டர் பொன்னுசாமி – திருமதி பாக்யலட்சமி தம்பதியினருக்கு இரண்டு குழந்தைகள்.

1981 வரை சென்னைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகவும், 1981–முதல் 1984 வரை கனடா 'பிரிட்டிஷ்' கொலம்பியா – பல்கலைக் கழகத்திலும் பணியாற்றினார்.

1984 – முதல் 1986 வரை அமெரிக்கா டெக்சாஸ் பல்கலைக்கழகத்தில் உயர் இயற்பியல் துறையில் பணியாற்றி, ஆய்வுப் பணிகளைச் செய்தார். 1986–ல் இந்தியா திரும்பி, சென்னைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்து 1998 முதல் பேராசிரியராகப் பணியாற்றுகிறார்.

25– ஆண்டு ஆசிரியப்பணி, ஆய்வுப் பணி அனுபவம் பெற்ற இவரிடம் 10 பேர் பிஎச்.டி–யும், 34 பேர் எம்.ஃபில் பட்டமும் பெற்றுள்ளனர்.


தற்போது 10 பேர் பிஎச்.டி.க்காக இவரிடம் பயின்று வருகின்றனர். தேசீய அளவிலும் பன்னாட்டு அளவிலும், பல்வேறு மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகளில் கலந்து கொண்டு, 100–க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்பித்துள்ளார்.

எகிப்து, கனடா, ஜெர்மனி, மலேசியா, இத்தாலி, போலந்து ஆகிய நாடுகட்கு ஆய்வுப்பணி மற்றும் கல்விப் பணிக்காகப் பயணம் செய்தவர். அண்ணாமலை பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், பெரியார் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் பாடத்திட்ட குழுவில் இடம் பெற்றுள்ளவர். தாய்மொழிப் பற்று மிகுந்த அன்னார் இயற்பியலில் Cystallography And Bio-Physics. பாடங்களைத் தமிழில் எளிய நடையில் மொழி பெயர்த்து மாணவர்கட்கு உதவியுள்ளார். படிகவியல் மற்றும் உயிர் இயற்பியல் துறையில் இவரது சாதனைகளைப் பாராட்டி, தமிழக அரசு 2003–ம் ஆண்டின் சிறந்த விஞ்ஞானியாகத் தேர்வு செய்து விருது வழங்கியுள்ளது.

அமெரிக்கா, கனடா ஜெர்மனி, எகிப்து, இத்தாலி, போலந்து, மலேசியா, சிங்கப்பூர் என்று உலகம் முழுவதிலும் உள்ள தகுதி வாய்ந்த பல்வேறு அமைப்புகள் மற்றும் நாடுகளுக்குச் சென்று பல்வேறு விருதுகளையும், பாராட்டுகளையும், பெருமைகளையும் பெற்றுள்ளார். உள்நாட்டிலும், அவர் துறை சார்ந்த பல்வேறு திட்டப்பணிகளிலும் பங்கேற்றுள்ளார்.

கொங்கு நாட்டில் ஒரு குக்கிராமத்தில் பிறந்து, இன்றைக்கு உலகளவில் தனது துறையில் சாதனை படைத்து, நாட்டிற்கும் கொங்குச் சமுதாயத்திற்கும் பெருமை சேர்த்துள்ள காடை கூட்டத்தைச் சேர்ந்த திரு. பொன்னுசாமி அவர்களைப் பாராட்டி 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்குவதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமை அடைகிறது.

## சாதனையாளர்



## அ. பொ. கந்தசாமி

அந்நாளில் எல்லாருக்கும் கல்வி பெறும் வாய்ப்புக் கிடைக்காமலிருந்தது. ஆனாலும் திறமையும், அறிவும் கொண்டவர்கள் பலர் பல துறைகளில் சாதனை படைத்துள்ளனர். அவர்களில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவர் அ.பொ. கந்தசாமி அவர்கள். கவிதை அவர் உடன்பிறப்பு. நொடிப்பொழுதில் கவிதையை அருவியாக தரும் ஆற்றல் உடையவர் இவர்.

1941–ல் கரூர் – அரவக்குறிச்சி – அத்திப்பாளையத்தில் திரு. பொன்னப்ப கவுண்டர் – திருமதி பகவதி அம்மாள் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்து பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு விவசாயத்தில் ஈடுபட்டார். கந்தசாமி மனைவி பெயர் மாராயி அம்மாள் கந்தசாமி–மாராயி அம்மாள் தம்பதியினருக்கு ஒரு மகள் உள்ளார்.

விவசாயத்துறையில் திரு. கந்தசாமி பல சாதனைகள் புரிந்துள்ளார். 1955–ல் நொய்யல் ஆற்று நீரை, எண்ணெய் இயந்திரம் மூலம் சுமார் இரண்டு மைல் தூரம் எடுத்துச் சென்று 15– ஏக்கர் பாசனம் செய்தவர். 1956–57–ல் ஒரு சென்ட் நிலத்தில் 2–டன் கரும்பு விளைவித்துப் பரிசு பெற்றார். 1957–ல் ஒரு சென்ட் நிலத்தில் ஒரு மூட்டை நெல் விளைய வைத்து, அமைச்சர் கக்கனிடம் பரிசும், அதே விழாவில் கவிதை பாடியதற்குப் பரிசும் பெற்றார்.

1958–ல் ஒரு தென்னை மரத்தில் 460 தேங்காய்களை ஒரே நேரத்தில் பறித்ததற்கும், 2–அடி நீளக் கம்புக் கதிர் விளைய வைத்தும், 4–கிலோ எடையுள்ள ஒரு முட்டைக்கோஸ் பயிரிட்டும். பூசணிக்காய், எலுமிச்சை, சுரைக்காய், வெங்காயதூர், பாய்கோரை, முள்ளங்கி ஆகியவற்றைப் பயிரிட்டு அதிக மகசூல் பெற்றதற்காக 16 பரிசுகளைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

**1960** மற்றும் **1962–**ம் ஆண்டுகளில் அப்பகுதியில் சுற்றுப்பயணம் செய்த அறிஞர் அண்ணா, பழையகோட்டை பட்டக்காரர், கலைஞர் கருணாநிதி, நாவலர் நெடுஞ்செழியன் ஆகியோர் முன்னிலையில் கவிதை மூலம் கோரிக்கைகளை வைத்துப்பாடி பாராட்டுப் பெற்றார்.

**1990** முதல் கோவை செழியன், அரூர் முத்துக்கவுண்டர், மோகன் கந்தசாமி போன்ற பல சமுதாயத் தலைவர்களைத் தன் பகுதிக்கு அழைத்துக் கூட்டங்களை நடத்தி, கொடியேற்றி, கிராமங்கள் தோறும், சமுதாய எழுச்சியை ஊட்டியவர். நாமக்கல், ஈரோடு மற்றும் **1994–**ல் நடைபெற்ற கரூர் கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவையின் மாநாடுகளில் பம்பரமெனச் சுழன்று பணியாற்றி மாநாடு வெற்றிக்குப் பாடுபட்டவர். கரூர் மாநாட்டுப் பிரசாரக் குழுத்தலைவர் பொறுப்பேற்று பட்டி தொட்டியெங்கும் பிரசாரம் செய்து மாநாட்டில் லட்சோப லட்சம் மக்கள் பங்கேற்கக் காரணமாக இருந்தவர்.


**1967–**சட்டமன்றத் தேர்தலில் அவர் பிரசாரம் அனைவரையும் கவர்ந்தது. கரூர் நல்லசாமி, அரவக்குறிச்சி கந்தசாமி, வெள்ளகோவில் சாமிநாதன் ஆகியோர் வெற்றிகாகப் பாடுபட்டார்.

**1973–**ல் அ.தி.மு.க வில் பொதுக்குழு உறுப்பினராக **6** ஆண்டுகள் பணியாற்றியவர். க.பரமத்தி நிலவள வங்கித் தலைவாராக இருந்தவர். **1981–**ல் நொய்யல் அணைத்திட்டப் பணி தொடக்க விழாவில் அவர் முக்கியப் பங்காற்றினார்.

**1986–**ல் க.பரமத்தி ஊராட்சி ஒன்றியத் தலைவராகத் தமிழகத்திலேயே அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வென்றவர். தொலைக்காட்சி, வானொலி ஆகியவற்றில் பல முறை அவருடைய கவிதைப் பேட்டி இடம் பெற்றது.

கொங்கு வேளாளர் சமூகத்தின் விழாக்கள், நிகழ்ச்சிகள் எங்கு நடந்தாலும் தவறாமல் சென்று கலந்து கொள்வார். கொங்குப் பேரவை பிரசாரக் குழுச் செயலாளராகவும், நொய்யல் ஆற்றுப் பாசன விவசாயிகள் பாதுகாப்பு சபை செயலாளராகவும் உள்ளார். விவசாயத் துறையில் பல சாதனைகள் செய்வதோடு, கொங்கு வேளாளர் சமுதாய மேம்பாட்டிற்கும் அரும்பாடுபட்டுவரும் சாதனையாளர் அ.பொ.கந்தசாமி அவர்களைப் பாராட்டுவதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமிதம் கொள்கிறது. கொங்குச் சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் பெருமை சேர்ந்த அன்னார் அவர்களுக்கு “கொங்கு சாதனையாளர் விருது” வழங்கி கௌரவிப்பதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமையடைகிறது.

## சாதனையாளர்



## டாக்டர் சி. ராயப்பா

வாய்ப்புக் கிடைத்தால் எல்லாத் துறைகளிலும் தனி முத்திரை பதிப்பவர்கள் கொங்கு வேளாளர்கள். டாக்டர் ராயப்பா அதற்கு ஒரு நல்ல உதாரணம். இளம் வயதிலேயே, காது, மூக்கு, தொண்டை மருத்துவத்தில் உலகப்புகழ் பெற்று விளங்குகிறார்.

நாமக்கல்லில் **1959–**ம் ஆண்டு திரு.சின்னசாமி – திருமதி கோதை நாயகி தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். தந்தை ஒரு வழக்கறிஞர். டாக்டர் ராயப்பா டாக்டர் ஜெயந்தி அவர்களை தன் வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொண்டார். அவர்கட்கு இரண்டு பெண் குழந்தைகள். நாமக்கல்லில் பள்ளிப் படிப்பை முடித்து, சென்னை மருத்துவக் கல்லூரியில் **1983–**ல் எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்றார். **1986–**ல் காது, மூக்கு, தொண்டை மருத்துவத்தில் டிப்ளமோ பெற்றார். **1987–**ல் உயர் கல்வி பெற இங்கிலாந்து சென்றார். **1989–**ல் FRCS பட்டம் பெற்றார். **1992–** வரை இங்கிலாந்திலும், அடுத்து சுவிட்சர்லாந்து ஜீரிச் நகரில், மண்டை ஓட்டின் அடிப்பகுதியில் செய்யக் கூடிய Skull base surgery என்ற அறுவை சிகிச்சையை, அந்தத் துறையில் உலகின் முதன்மையான மருத்துவரின் உதவியுடன் செய்து அதன் நுணுக்கங்களைக் கற்றார்.

**1992–**மதல் **1994–**வரை வளைகுடா நாடுகளில் உள்ள புகழ்பெற்ற சிறந்த மருத்துவமனைகளில் பணியாற்றி பல புதிய அனுபவங்களைப் பெற்றார். **1995–**ல் சென்னை வந்து அப்போலோ சிறப்பு மருத்துவப் பிரிவில் பணியாற்றினார். அண்ணாநகரில் சொந்தமாக மருத்துவமனை தொடங்கி மருத்துவம் செய்து வருகிறார். காது, மூக்கு, தொண்டையில் வரும் கட்டிகளின் அறுவை சிகிச்சை, Skull Base Surgery லும் இந்தியாவில் உள்ள தலைசிறந்த மருத்துவர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார். சுரப்பியில் வரும் கட்டியை 'என்டோஸ்கோப்பி' கருவியால் மூக்குத்துளை வழியாக அகற்றுவதில் நிபுணத்துவம் பெற்றவர். இத்துறையில் இந்திய

நாட்டில் வெகு சிலரில் ஒருவராகவும், தெற்காசியாவிலேயே தலை சிறந்த அறுவை சிகிச்சை வல்லுனர்களில் குறிப்பிடத்தகுந்தவராகவும் கருதப்படுகிறார். தனது துறையில் தான் கற்ற அனுபவங்களைப் புத்தகமாக எழுதியுள்ளார். மேலும் இரண்டு நூல்கள் அச்சில் உள்ளன.

இந்தியா மற்றும் பல்வேறு நாடுகளில் நடைபெற்ற துறை சார்ந்த மருத்துவக் கருத்தரங்குகளில் பங்கேற்று விஞ்ஞான ரீதியிலான ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்து உலகளவில் புகழ் பெற்றுள்ளார். அயல் நாடுகளில் இருந்து இவரிடம் சிகிச்சை பெற பல பேர் வருகிறார்கள்.

தனது வெப்சைட் ‘www.drrayappa.com’ மூலமாக தனது அனுபவத்தில் பெற்ற அறுவை சிகிச்சை பற்றிய அனைத்து விவரங்களையும் தெரிந்து கொள்ளலாம் என்கிறார்.

தனது துறை பற்றிய சுமார் 17–வெளியீடுகளை வெளியிட்டுள்ளார். இந்தியா மற்றும் வெளிநாடுகளில் நடைபெற்ற மருத்துவத் துறை மாநாடுகளில் துறை சார்ந்த நாட்டிலுள்ள அனைத்து அமைப்புகளிலும் அங்கம் வகிக்கிறார்.

கொங்குச் சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் பெருமை சேர்த்த அன்னார் அவர்களுக்கு ‘கொங்கு சாதனையாளர் விருது’ வழங்கி கௌரவிப்பதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமையடைகிறது.

# கொங்கு நாட்டின் பொருளாதாரப் புரட்சி

'இலட்சியம் ஊக்கத்தை உருவாக்கும். ஊக்கத்தால் உயரிய எண்ணங்கள் மலரும். உயரிய எண்ணங்களால் உழைப்புத்திறன் பெருகும். உழைப்பு நற்செயல்களுக்கு ஆதாரமாகும்'.

'பாரத ரத்னா' டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம்,

இந்தியக் குடியரசுத் தலைவர்.

வளரும் தலைமுறையினரை வளர்ந்த இந்தியாவை நோக்கிய பயணத்தில் உளக்கத்துடனும், உற்சாகத்துடனும், ஈடுபடுவதற்காக, ஒரு வழிகாட்டியாக,

'இந்தியா 2020 – புத்தாயிரம் ஆண்டுகளுக்கான ஒரு தொலைநோக்கு'

என்ற தனது புத்தகத்தின் முகவுரையில், 'தமிழக மக்களுக்கு' என்ற தலைப்பின் கீழ் தனது இலட்சியக் கனவைத் தெரிவித்து, இந்திய மக்களின் எண்ணங்களையும், உலக நாடுகளின் பார்வைகளையும் தன்னகத்தே ஈர்த்தது ஒரு மாபெரும் விஞ்ஞானியின் மகத்தான சாதனையாகும்.

நம் நாட்டின் வேளாண்மை, தொழில் உற்பத்தி, பொறியியல், பொருளாதாரம், மருத்துவம், உள்கட்டமைப்பு, தொழில் நுட்பம், மக்கள் வாழ்க்கைத் தரம், மனிதவளம் போன்ற காரணிகள் ஒட்டுமொத்தமாக வளரும் சூழ்நிலை ஏற்படுகின்ற பொழுது வளர்ச்சியடையாத நாட்டின் நிலையிலிருந்து வளர்ச்சியடைந்து வரும் நாடாக மாறும் சூழ்நிலை ஏற்படும். ஒரு நாட்டின் மொத்த நிலை வளர்ச்சி, மாநிலங்களின் வளர்ச்சி, வட்டாரங்களின் வளர்ச்சியை உள்ளடக்கியதாகும்.

நமது கொங்கு மண்டல வளர்ச்சியை, இந்திய நாட்டின் வளர்ச்சியுடன் ஒப்பிடும் பொழுது பிரமிக்கத் தக்க வளர்ச்சியை கொங்குப் பகுதி பெற்றுள்ளது என்பதை பல புள்ளி விவரங்களால் உணர முடியும். உள் நாட்டு உற்பத்தி மற்றும் ஏற்றுமதி வளர்ச்சியைப் பொருளாதார நிபுணர்களும், தொழில் மற்றும் வர்த்தகப் பிரமுகர்களும் இதனை 'கொங்கு நாட்டுப் பொருளாதாரப் புரட்சி' என்று மனதாரப் பாராட்டுகிறார்கள். இப்பொருளாதார வளர்ச்சி பல்வேறு துறைகளில் ஒவ்வொரு நொடியும் பரிணாம வளர்ச்சி அடைவதால், கொங்குநாட்டு மக்கள் முழுமையாகவும் வெளிப்படையாகவும் உணர முடியாதவர்களாக உள்ளார்கள்.

கொங்குநாட்டுப் பகுதியில் மற்ற சமூகத்தினருடன் பெருவாரியாக வாழ்பவர்கள் கொங்கு வேளாளக்கவுண்டர் சமூகத்தைச் சார்ந்தவர்கள். மற்ற இனத்தவர்களும் கணிசமானளவில் பல்வேறு தொழில்துறையில் பங்காற்றி பல சாதனைகள் புரிந்து வருகிறார்கள். ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் பொழுது, கொங்கு மண்டலப் பொருளாதார வளர்ச்சிக்குப் பல காரணங்கள் உண்டு. 'பாரத ரத்னா' திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் தொடங்கிய பசுமைப் புரட்சி, வெண்மை புரட்சி, தொழில்நுட்பப் புரட்சி ஆகியவற்றை முழுமனதுடன் முதலில் அரவணைத்து இந்தியா முழுவதும் வெற்றி பெறச் செய்தது கொங்கு நாடாகும். வெண்மைப்புரட்சியை ஈர்த்ததும், அதனால் உலகில் அதிகமாகப் பால் உற்பத்தி செய்யும் இரண்டாவது நாடாக இந்தியா உள்ளது. அதுபோன்று வேளாண் உற்பத்தி, தொழில் உற்பத்தி, பருத்திநூல் ஆடைஉற்பத்தி ஆகியவற்றில் கொங்குநாடு இந்திய அளவில் மட்டுமல்ல, உலகளவில் குறிப்பிடத்தக்க அளவு முன்னணியில் உள்ளது என்பது கொங்கு நாட்டு மக்கள் பெருமையடையக்கூடிய செய்திகளாகும்.

நம்மில் பலர், கொங்குநாட்டின் பல்வேறு வளர்ச்சிகளை அறியாதவர்களாக உள்ளார்கள். நமது கொங்குப் பகுதியின் வளமும், பலமும் மற்றவர்களுக்கு வர்த்தக பூமியாக உள்ளதை இம்மண்ணின் மைந்தர்கள் புள்ளி விவரத்துடன் தெரிந்து கொள்ள வேண்டும். இன்றைய நாளில் உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தித்திறன் 31032.94 பில்லியன் அமெரிக்க டாலர்கள் ஆகும். உலக நாடுகளில் உள்நாட்டு உற்பத்தித்திறன் விழுக்காடு வளர்ச்சி விகிதம் சுமார் 3% ஆகும். ஆனால் இந்திய நாட்டின் சராசரி வருடாந்திர மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 6.5–7.5 விழுக்காடு ஆகும்.

இந்திய நாட்டின் உற்பத்தி வளர்ச்சி சதவீதம் உலகின் உற்பத்தித் திறனைக் காட்டிலும் இரு மடங்கு ஆகும். அதுபோல கொங்குநாட்டின் உற்பத்தித் திறனை தேசிய அளவில் ஒப்பிடும்பொழுது பல துறைகளில் சுமார் 10% மேல் உள்ளது என்பது வியப்புக்குரியதாகும்.

வர்த்தக உலகில் நம் கொங்குநாடு தொழில் உற்பத்தி, மனித வளம் மற்றும் பல துறைகளில் குறிப்பிடத்தக்க முதன்மை நிலையைக் கொண்டுள்ளது. மேலும் பல்வேறு கொருட்கள் ஏற்றுமதியிலும், உழைப்புத்திறனிலும், பல்வேறு சேவைத்துறைகளிலும் கொங்குநாடு உலகளவில் முன்னணியில் உள்ளது.

கொங்குநாடு பல்வேறு உற்பத்தி வர்த்தகங்களின் உலகத் தலைமைக் கேந்திரமாக விளங்குகிறது. அவையாவன,

| பருத்தி நூல் மற்றும் அதனைச் சார்ந்த உற்பத்தி பொருட்கள் | | |
|---|---|---|
| பின்னலாடை | : | திருப்பூர் |
| நூல் உற்பத்தி | : | கோயம்புத்தூர், ஈரோடு, திண்டுக்கல், நாமக்கல், சேலம் மாவட்டங்களில் சில இடங்கள். |
| துணி நெய்தல் | : | பல்லடம், சோமனூர், ஈரோடு, திருச்செங்கோடு, குமாரபாளையம் போன்ற பகுதிகள். |
| படுக்கை விரிப்புகள் | : | சென்னிமலை |
| ஜமுக்காளம் | : | பவானி |
| படுக்கை, மேஜை விரிப்புகள் | : | கரூர் |
| உயர்ரக லிணன் துணிகள் | : | திருச்செங்கோடு, பல்லடம் |
| கால் துணி மிதியடிகள் | : | சோமனூர், திருப்பூர், ஈரோடு. |
| வேளாண் பொருட்கள் | | |
| மஞ்சள் | : | ஈரோடு |
| கடலை, எள் எண்ணெய் உற்பத்தி | : | ஈரோடு, வெள்ளக்கோவில் |
| உயர்ரக அரிசி / உற்பத்தி | : | ஈரோடு, ஊத்துக்குளி |
| முட்டை உற்பத்தி | : | ஈரோடு, நாமக்கல் மாவட்டங்கள் |
| கறிக்கோழி வளர்ப்பு | : | பல்லடம் |
| இயந்திரங்கள் உற்பத்தி | | |
| இயந்திரங்கள், உதிரி பாகங்கள் | : | கோயம்புத்தூர் |
| வார்ப்பிரும்பு உற்பத்தி | : | கோயம்புத்தூர் |

| | | |
|---|---|---|
| மின் மோட்டார்கள் | : | கோயம்பத்தூர் |
| மின் உற்பத்தி சாதனங்கள் | : | கோயம்பத்தூர் |
| மென்பொருள் உற்பத்தி | : | கோயம்பத்தூர் |
| சேவை வசதிகள் | | |
| பேருந்து இயக்கம் லாரி, போர்வெல் இயந்திரம், | : | ஈரோடு, கரூர், நாமக்கல், சேலம் |
| புல்டோசர் போன்ற கனரக இயந்திரங்கள் | : | நாமக்கல், திருச்செங்கோடு, சங்ககிரி, கரூர். |
| சலவைக்கல் உற்பத்தி | : | சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி |

மேலே தெரிவிக்கப்பட்டுள்ள கொங்குநாட்டில் உற்பத்தியாகும் முக்கியப் பொருள்களின் விவரம் முழுமையானதல்ல. இப்பொருட்கள் தேசிய அளவிலான சந்தையிலும், உலக அளவிலான வர்த்தகத்திலும் முதன்மையான இடத்தைத் தக்க வைத்துள்ளன என்பது பெருமைக்குரிய செய்திகள் ஆகும். அப்பொருட்கள் உள்நாட்டு சந்தையில் சுமார் ஒரு இலட்சம் கோடி ரூபாய் மதிப்பிற்கு ஆண்டுதோறும் வணிகம் நடந்து வருகிறது. உள்நாட்டு சந்தை மட்டுமின்றி ஏற்றுமதியிலும், உலகச் சந்தையில் பருத்தி நூல் சார்ந்த உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி மற்றும் சுமார் பத்தாயிரம் கோடி ரூபாய்க்கு மேல் உள்ள நிலையில், வரும் ஆண்டில் சுமார் 35 சதவீதம் உயரும் வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுபோன்று வார்ப்பிரும்பால் ஆன பொருள்களின் ஏற்றுமதியில் உலகளவில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பல ஆண்டுகளாக கோவை மாநகர் பெற்றுள்ளது. கனரக இயந்திரங்கள், உதிரிப் பொருட்கள், சலவைக்கல், மஞ்சள், பதனிடப்படாத தோல், காகிதம், முட்டை பவுடர், சர்க்கரை, மென்பொருள் ஆகியவைகள் உலகச் சந்தை அளவில் குறிப்பிடத்தக்க முன்னிலை இடத்தைப் பெற்றுள்ளன.

போக்குவரத்துத் துறையில் கொங்குநாட்டைச் சார்ந்த தொழில் முனைவோர்களின் பணி தேசிய அளவில் வியக்கத்தக்க சிறப்பைப் பெற்றுள்ளது.

குறிப்பாக பயணிகள் போக்குவரத்து, சரக்கு போக்குவரத்து, புல்டோசர், பொர்க்லைன் போன்ற கனரக இயந்திரங்களை இந்திய அளவில் பயன்படுத்துதல் முன்னணியிலும், உலக அளவில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பெற்றுள்ளது. இந்திய அளவில் போக்குவரத்து வாகனங்களில் சுமார் 30 சதவீதம் கொங்குநாட்டைச் சார்ந்தது ஆகும்.

இந்தியப் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றிருக்கும் கொங்கு நாட்டிற்கு, அவ்வளர்ச்சியால் மாநில அரசும், இந்திய அரசும் பெறும் வருவாய்க்குத் தக்கவாறு வசதிகளை ஏற்படுத்த முனையவில்லை என்பதுதான் பதிலாகும்.

கொங்குப் பகுதியில் ஈட்டப்படும் வருவாய் கொங்கு நாட்டிலேயே செலவு செய்யப்பட வேண்டும். அடிப்படை வசதிகளில் மாநில அரசம், மைய அரசும் பெருமளவில் முதலீடு செய்ய வேண்டும். தொழில் முனைவோர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் மட்டுமல்லாமல், கால விரயமின்றி பல்வேறு வசதிகளைச் செயல்படுத்த வேண்டும். இன்று வளர்ந்து வரும் இளம் கொங்கர்கள் உலக அளவிலான வர்த்தகத்தை தன் கைவசம் ஈர்க்க அனைத்து தியாகங்களையும் செய்து வருகிறார்கள். அவர்கள் சோர்வடையாமலிருக்கவும், கொங்கு தேசத்தை வளப்படுத்த பொருளாதாரத்தைச் சார்ந்த சமூகத்தை வளர்க்க அரசுகள் தவறினால் எதிர்காலத்தில் அதனை செயல்படுத்த கொங்கர்களே களமிறங்கத் தயங்க மாட்டார்கள் என்பது மட்டும் அனைவரது சூளுரையாகும்.

– காராசி

# சென்னை, கொங்கு நண்பர்கள் சங்கம் கௌரவித்த கொங்கு மாமணிகள்

**2001**

1. **திரு. கே.எம். சென்னியப்பன்**

சங்கத்தின்செயலாளராக பல ஆண்டுகள் பணிபுரிந்து சங்கம் வளர பாடு பட்டமைக்காக வழங்கப்பட்டது.

2. **டாக்டர் பழனி ஜி. பெரியசாமி**

பல்வேறு விருதுகளை பெற்று, இந்திய நாட்டிற்கும், கொங்கு சமுதாயத்திற்கும் ஆற்றிய பணிகளைப் பாராட்டி வழங்கப்பட்டது.

2. **திரு. ஜெம். ஆர். வீரமணி**

நாட்டின் தலை சிறந்த கிரானைட் ஏற்றுமதியாளர், பல்வேறு தேசிய விருதுகள், பல்வேறு அமைப்புகளின் தலைவராக இருந்து நாட்டிற்கு ஆற்றிய அரும்பணிகளைப் பாராட்டி வழங்கப்பட்டது.

**2002**

4. **திரு. S.V. பாலசுப்பரமணியம்**

பல்வேறு வகையான துறைகளில் ஈட்டிய சாதனைகளுக்காகவும், பல்வேறு பட்ட துகையளில் வளர்ந்து நமது இனத்தில் மிகுந்த சிறப்பு பெற்றவராக ஓங்கி உயர்ந்து நின்று சமுதாயத்திற்கப் பெருமை சேர்த்தமைக்காகவும் சமுதாய வளர்ச்சியில் காட்டும் ஈடுபாட்டிற்காகவும் பாராட்டி கொங்கு மாமணி விருது வழங்கப்பெற்றது.

5. **மூத்த வழக்கறிஞர் திரு. R. காந்தி**

கொங்கு நாட்டின் பெருமையை சென்னையில் நிலைநாட்டியவர் சி. சுப்ரமணியத்தின் சீடர். பேச்சாற்றல் மிக்கவர். நிதிக்காக வாதாடாமல் நீதிக்காக வாதாடுபவர். மனிதநேயர், அஞ்சாநெஞ்சினர், சிறந்த பண்பாளர் திருக்குறளில் அளவற்ற ஈடுபாடுடையவர், எல்லாவற்றுக்கும் மேலாக கவுண்டர் என்று செல்லிக்

கொள்வதில் பெருமை கொள்பவர். இத்தகு பண்புகளை பாராட்டிகொங்கு மாமணி விருது வழங்கப்பெற்றது.

**2003**

**6. திரு. D.R. கார்த்திகேயன் I.P.S. (Retd)**

உலகம் வியக்கும் வண்ணம் தான் சேர்ந்த துறையில் அற்புதமான பணி, ஓய்வு காலத்தை விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக அர்பணிப்பு, மற்றும் தன்னலமற்ற சேவையை பாராட்டி வழங்கப்பெற்றது.

**7. திருச்சி. R. தேவராஜன்**

கொங்கு இன மக்கள் முன்னேற்றத்திற்காகவும், ஒற்மைக்காகவும் அயராது பாடுபட்டு, தன்னை அர்ப்பணித்துக் கொண்டமைக்கு பாராட்டி வழங்கப்பெற்றது.

**8. திரு. G.R. சுந்தரவடிவேல்**

தன் வாழ்நாள் முழுவதும் ஒரு தலைசிறந்த வங்கி அதிகாரியாகப் பணிபுரிந்து, நாணயத்திலும், கடின உழைப்பிலும் நற்பெயரெடுத்து கொங்கு சமுதாய மக்களின் முன்னேற்றத்திற்கு பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்து அரும்பணி ஆற்றியமைக்காக பாராட்டி வழங்கப்பட்டது.

# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

## கௌரவித்த

# சாதனையாளர்கள்

1995

| எண். | பெயர் | ஊர் | விபரம் |
|---|---|---|---|
| 1. | திரு. பத்மஸ்ரீ ஆர்.எம்.வாசகம் | - சென்னை - | துணை வேந்தர், அண்ணா பல்கலைக்கழகம். |
| 2. | திரு. R.வீரமணி | - சென்னை - | தலைவர், ஜெம் கிரானைட்ஸ். |
| 3. | திரு. பழனி. ஜி. பெரியசாமி | - சென்னை - | தலைவர், பி.ஜி.பி. தரணி குரூப் நிறுவனங்கள். |
| 4. | திரு. R.காந்தி | - சென்னை - | வழக்கறிஞர். |
| 5. | திரு. மாசி | - அரூர் - | தலைவர், அம்மன் கிரானைட்ஸ். |
| 6. | திரு. செ. தமிழ்மணி | - பெங்களூர் - | சிறந்த விஞ்ஞானி. |
| 7. | திரு. ஆர். தீனதயாளு | - சென்னை - | கணிப்பொறி வல்லுநர், ஐ.ஐ.டி. |
| 8. | திரு. பி. கொங்குவேள் | - சென்னை - | செஸ் விளையாட்டு வீரர். |
| 9. | செல்வி. பி.சுமதி | - | செஸ் விளையாட்டு வீராங்கனை. |
| 10. | Dr. சி.பழனிவேலு | - கோவை - | அறுவைசிகிச்சை நிபுணர். |
| 11. | திரு. R.தெய்வசிகாமணி | - கல்பாக்கம் - | சிறந்த விஞ்ஞானி. |
| 12. | செல்வன். பி.நரேந்திரன் | - சென்னை - | டென்னிஸ் வீரன். |

1996

| | | | |
|---|---|---|---|
| 13. | செல்வி. எம்.நீலா | - | மருத்துவக் கல்லூரி நுழைவுத் தேர்வில் அதிக மதிப்பெண். |
| 14. | திரு. எஸ். தனஞ்செயன் | - | ஐ.ஏ.எஸ். |
| 15. | திரு. பி. செந்தில்குமார் | - | ஐ.ஏ.எஸ். |



54. Dr. G.குமாரவேலு, IFS., - சிறந்த அதிகாரி வனத்துறை.

| | | | |
|---|---|---|---|
| 16. திரு. **வி.சி.பெருமாள், IPS** | - சென்னை | - | ஜனாதிபதி பரிசு |
| 17. திரு. **ஆர். செல்லப்பன்** | - சென்னை | - | சிறந்த இளம் தொழிலதிபர் நியமெரிக் பவர்சிஸ்டம் |
| 18. டாக்டர். **R.பாலசுப்பிரமணியன்** | - | - | சிறந்த சமூக சேவை. |
| 19. திரு. **பி.குமாரசாமி** | - திருப்பூர் | - | திருப்பூர்சிறந்த ஏற்றுமதியாளர், |
| 20. செல்வன் **வி. அரவிந்தன்** | - சென்னை | - | பரதநாட்டியம் |
| 21. திரு. **ஆயி கவுண்டர்** | - பெங்களூர் | - | சிறந்த விஞ்ஞானி |

1997

| | | | |
|---|---|---|---|
| 22. செல்வி **திவ்யா** | - | - | மருத்துவ தேர்வில் முதல் இடம். |
| 23. திரு. **என். செல்வகுமார்** | - சென்னை | - | 1987ம் ஆண்டு ஐ.ஏ.எஸ். தேர்வு பெற்றமைக்காக. |
| 24. திரு. **செங்கதிர்** | - சென்னை | - | 1997ஆம் ஆண்டு ஐ.பி.எஸ். தேர்வு பெற்றமைக்காக. |
| 25. திருமதி **மலர் முத்துசாமி** | - | - | தொழில் துறையில் சிறந்த உயர்வுக்காக. |
| 26. திரு. **பி.எஸ்.செங்கோடன்** | - தி. செங்கோடு | - | பொதுப்பணி |
| 27. திரு. **C.குமாரசாமி** | - ஈரோடு | - | கல்விப்பணி |
| 28. திரு. **M.முருகேசன்** | - சென்னை | - | சமூக சேவை |
| 29. சிலம்பொலி **செல்லப்பன்** | - சென்னை | - | தமிழ்வளர்ச்சிப்பணி. |
| 30. திரு. **பி.எச்.பழனிச்சாமி** | - | - | கல்வி பணி |
| 31. திரு. **கே.வரதராஜன்** | - | - | மின்சார வாரியம், அரசுப்பணி |
| 32. திரு. **சிற்பி பாலசுப்பிரமணியம்** | - பொள்ளாச்சி | - | இலக்கிய பணி |
| 33. டாக்டர். **விஜயகுமார்** | - சென்னை | - | சிறந்த மருத்துவர். |
| 34. திரு. **கே. முத்து சாமி** | - | - | கொங்கு சமுதாயப்பணி |
| 35. திரு. **N.கொளந்தசாமி** | - ஈரோடு | - | கொங்கு சமுதாயப்பணி |

36. திரு. **S.அருணாசலம்** - சென்னை - கொங்கு சமுதாயப்பணி
முன்னாள் தலைவர்

37. திரு. **P.தேவராஜன்** - சென்னை - கொங்கு சமுதாயப்பணி
முன்னாள் தலைவர்

1998

38. திரு. **M.இராமசாமி** - அரூர் - அம்மன் கிரானைட்ஸ், அரூ
சிறந்த ஏற்றுமதியாளர்.

39. Dr. **ஜனகரத்தினம்** - கோபி - கல்விப்பணி.

40. திரு. **Dr. நிர்மலா ராமமூர்த்தி** - ஆராய்ச்சியாளர்.

41. திரு. **P.C.துரைசாமி** - ஈரோடு - சக்தி மசாலா,
சிறந்த தொழில் அதிபர்.

42. திருமதி. **செல்லம்மாள்** - சென்னை - சிறந்த பெண் தொழிலதிபர்

43. திரு. **M.சந்திரசேகரன்** - சாதனையாளர்.

44. திரு. **M.பொன்னுசாமி** - சென்னை - பியூர் கெமிக்கல்ஸ்,
சிறந்த தொழிலதிபர்.

45. Dr. **ராஜாமணி** - சென்னை - சிறந்த ஆராய்ச்சியாளர்.

46. புலவர் **செ. இராசு** - ஈரோடு - சிறந்த கொங்கு ஆராய்ச்சியாள

47. Dr. **தாமோதரன்** - சென்னை - சிறந்த தடயவியல் ஆராய்ச்சியாள

48. திரு. **கந்தசாமி** - நல்லாசிரியர்.

49. Dr. **அன்பழகன்** - சிறந்த ஆராய்ச்சியாளர்.

50. திரு. **மயில்சாமி** - பல்லடம் - சிறந்த சமூகசேவை

1999

51. திரு. **K.கந்தசாமி** - சிறந்த கல்விப்பணி.

52. Dr. **C.நமச்சிவாயம்** - சிறந்த கல்விப்பணி.

53. Dr. **A.M.சச்சிதானந்தம்** - சென்னை - சிறந்த கல்விப்பணி.

| | | |
|---|---|---|
| 54. Dr. **G.குமாரவேலு**, IFS., | - | சிறந்த அதிகாரி வனத்துறை. |
| 55. திரு. **K.R.மணி** | - | சிறந்த ஏற்றுமதியாளர். |
| 56. திரு. **S.V.குமரகுருபரசாமி** | - | சிறந்த ஏற்றுமதியாளர். |
| 57. Dr. **ராஜ் கவுண்டர்** | - U.S.A. - | கணிப்பொறி ஆராய்ச்சி வல்லுநர் |
| 58. திரு. **பொன்வண்ணன்** | - | திரைப்படத்துறை. |
| 59. திரு. **C.முத்துசாமி** | - | சிறந்த சமுதாயப்பணி. |
| 60. திரு. **A.ஈசுவரன்** | - திருப்பூர் - | சிறந்த கல்விப்பணி. |
| 61. Dr. **V.இராமசாமி** | - | சிறந்த மருத்துவப் பணி. |
| 62. திரு. **V.பரமசிவம்** | - | சிறந்த ஏற்றுமதியாளர் |
| 63. திரு. **A.K.வெங்கிடசாமி** | - சென்னை - | தொழிற்துறை |
| 64. செல்வி. **வினோதினி வாசுதேவன்**- | | கல்விச் சாதனை. |

2000

| | | |
|---|---|---|
| 65. திரு. **சம்பத் குமார்** | - சென்னை - | கிரிக்கெட் வீரர், |
| 66. திரு. **S.நாகல்சாமி** | - சென்னை - | ஐ.ஏ.எஸ்., |
| 67. செல்வி. **ஜெயந்தி** | - கோவை - | வேளாண் பல்கலைகழகம், |
| 68. திரு. **கன்னையன்** | - கோவை - | H.H.E., |
| 69. Dr. **மணி** | - நாமக்கல் - | சிறந்த மருத்துவர் |
| 70. திரு. **K.பழனிசாமி** | - சென்னை - | சிறந்த தொழில் மேலாண்மை, |
| | - | கவின்கேர், |
| 71. திரு. **கருப்பன்** | - நாமக்கல். - | சிறந்த ஆசிரியர் |
| 72. திரு. **K.K. சோமசுந்தரம்** | - சென்னை - | ஐ.எப்.எஸ்., |
| 73. திரு. **காளியப்பன்** | - நாமக்கல் - | தென்பாண்டியன் போக்குவரத்து, |
| 74. திரு. **ஞானசேகரன்** | - வேலூர் - | சட்டமன்ற உறுப்பினர், |
| 75. திரு. **ஷண்முகம்** | - சென்னை - | சாந்தி எலக்ரிகல்ஸ், |
| 76. திரு. **காசி** | - ஜலகண்டாபுரம் - | இளம் தொழிலதிபர், |
| 77. Dr. **பாலசுப்ரமணியம்** | - சென்னை - | உமா கிளினிக், |

| | | | |
|---|---|---|---|
| 78. திரு. முத்துராஜா | - சேலம் | - | G.T.P. மார்பில்ஸ், |
| 79. திரு. கோபால் | - | - | சாதனையாளர். |

2001 ஆம் ஆண்டு

| | | | |
|---|---|---|---|
| 80. திரு. எஸ்.கே. செங்கோடகவுண்டர், | - சேலம் | - | சிறந்த தொழிலதிபர். |
| 81. திரு. கே.பொன்னுசாமி | - நாமக்கல் | - | சிறந்த தொழிலதிபர். |
| 82. திரு. கா.அரங்கசாமி, | - தாராபுரம் | - | சிறந்த ஆராய்ச்சியாளர். |
| 83. திரு. கே.ஆர்.அப்பாவு, | - சென்னை | - | சிறந்த தொழிலதிபர். |
| | | - | முன்னாள் தலைவர், |
| 84. டாக்டர். எஸ். அசோகன் | - | - | சிறந்த மருத்துவர். |
| 85. டாக்டர். எம்.கந்தசாமி, | - நாமக்கல் | - | சிறந்த கல்வியாளர். |
| 86. திரு. ஆர். செல்வராஜ், | - சென்னை | - | சிறந்த இளம் தொழிலதிபர். |
| 87. திரு. ஆர். ராஜேந்திரன் | - மேட்டூர் | - | சிறந்த சமூக சேவையாளர். |
| 88. செல்வி. காஞ்சி கைலாசம், | - சென்னை | - | இளம் விளையாட்டு (நீச்சல்) வீராங்கனை. |

2002 ஆம் ஆண்டு

| | | | |
|---|---|---|---|
| 89. திருமதி. பாரதி செங்கோட்டுவேல் | - சென்னை | - | சிறந்த கட்டிட வடிவமைப்பாளர். |
| 90. திரு. கே. செல்லமுத்து, | - ஒட்டன்சத்திரம் | - | விவசாயிகள் நலப்பணி. |
| 91. அரிமா. திரு. கே.தனபாலன், | - ஈரோடு | - | சிறந்த சமூகசேவைப்பணி. |
| 92. திரு. ஆர்.கணேசன், | - சென்னை | - | சிறந்த இளம் தொழிலதிபர். |
| 93. திரு. க.கிருஷ்ணமூர்த்தி, | - நாமக்கல் | - | நல்லாசிரியர் விருது பெற்றவர். |
| 94. முனைவர். எஸ்.முத்து, | - நாமக்கல் | - | தொழில்நுட்ப கல்வி வளர்ச்சிபணி. |
| 95. திரு. கே.பி.நடராஜன், | - சேலம் | - | சிறந்த தொழிலதிபர் போக்குவரத்து |
| 96. திரு. பி.சி.பழனிச்சாமி, | - ஈரோடு | - | சிறந்த வழக்கறிஞர். |
| 97. திரு. S. பிரேம்துரை, | - திருப்பூர் | - | சிறந்த தொழிலதிபர், ஏற்றுமதியாளர். |
| 98. திரு. M. ராமசாமி, | - இராசிபுரம் | - | வேளாண்மைத்துறை. |
| 99. Dr. கே.சண்முகசுந்தரம், | - சென்னை | - | மருத்துவதுறை. |

| | | | |
|---|---|---|---|
| 100.முனைவர். **இரா.வடிவேலன்,** | - ஈரோடு | - | இலக்கிய வளர்ச்சி பணி. |
| 101.திரு. **எஸ். வரதராஜன்** | - | - | அறிவியல் அறிஞர். |
| 102.திருமதி. **சி.விஜயலட்சுமி,** | - சென்னை | - | சிறந்த கல்விப்பணி. |

**2003 ஆம் ஆண்டு**

| | | | |
|---|---|---|---|
| 103.திரு. **நல்ல கோவிந்தசாமி** | - சென்னை | - | சிறந்த சமுதாயப்பணி. |
| 104.திரு. **K.நல்லியப்பன்** | - சென்னை | - | சிறந்த தொழிலதிபர். |
| 105.திரு. **J.P.லியோ கணேஷ்** | - சென்னை | - | சிறந்த சமுதாயப்பணி. |
| 106.திரு. **'தங்கமணி' P.M.பழனிசாமி-கவுண்டர்** | - புதுப்பாளையம் | - | சிறந்த சமூகப்பணி. |
| 107.Dr. **K.V.காளியப்பன்** | - சென்னை | - | சிறந்த பேராசிரியர்/ஆராய்ச்சியாளர். |
| 108.திரு. Dr. **R.பாலசுப்பிரமணியன்** | - சென்னை | - | சிறந்த பேராசிரியர். |
| 109.திரு. Dr. **K.R.பழனிசாமி** | - சென்னை | - | சிறந்த மருத்துவர். |
| 110.திரு. **செ.நல்லுசாமி** | - அரச்சலூர் | - | சிறந்த விவசாயிகள் |
| 111.திரு. **M.சிவப்பிரகாசம்** | - நாமக்கல் | - | தேசிய நல்லாசிரியர் விருது. |
| 112.திரு. **R.சாய்நாதன்** | - ஈரோடு | - | சிறந்த சமூகப்பணி. |
| 113.திரு. **S.ஜெயவேலன்** | - பெங்களூர் | - | சிறந்த சமுதாய முன்னேற்றப்பணி. |
| 114.திரு. **K.சிவலிங்கம் சகோதரர்கள்** | - அந்தியூர் | - | சிறந்த கல்விப்பணி. |
| 115.திரு. **V.அன்பழகன்/V.சுந்தரேசன்** | - சேலம் | - | சிறந்த தொழிலதிபர். |
| 116.திருமதி **Dr. உமா செல்வராஜ்** | - சேலம் | - | சிறந்த சமூக சேவகி. |
| 117.திரு. **திருமதி Dr. R.சாந்தி** | - கோவை | - | சிறந்த மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் விஞ்ஞானி. |